REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 17 | சுன்னாகம் — விய — ஆவணி ௩௰, 15-9-'46 — ஞாயிறு | இதழ் 10

SEP 16 1946

# 'சேர வாரும் செகத்தீரே!'

—ஸ்ரீ சேனநாயகா

## வகுப்புவாதிகள் கலக்கம்

[நமது அரசியல் நிருபர்]

**"யாழ்ப்பாண மக்களிடம் எனக்கு நல்ல விசுவாசம் உண்டு. நான் ஒரு கமக்காரன். ஆகவே நாட்டைப் பண்படுத்திப் பயன் பெறுபவர்களை நான் மெச்சுகின்றேன். அவர்களின் வாழ்வும் செல்வமும் நாட்டின் ஏனைய பாகங்களுடன் இணைந்துள்ளன. அவர்கள் எங்களில் ஒரு பகுதியினர். எங்களைப்போல் அவர்களும் இலங்கைமக்கள்தான். இரு சாகியத்தாருக்கும் பொதுவான சரித்திரம் நூற்றுண்டுகளாக நிலவி வருகின்றது."**

இவ்வாறு ஸ்ரீ சேனநாயகா கடந்தவாரம் நிகழ்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக சபைக் கூட்டமொன்றில் வெகு அழகாகப் பேசியிருக்கின்றார். காலத்துக்கும் சந்தர்ப்பத்துக்கும் ஏற்ப அரசியல்வாதிகள் தங்கள் காரியங்களைக் கெட்டித்தனமாகப் பார்த்துக்கொள்ளுகின்றனர் என்பதற்கு இத்தகைய பேச்சுக்கள் சிறந்த உதாரணங்கள் அல்லவா? இப்படிக் குறிப்பிடும்போது ஸ்ரீ சேனநாயகாவின் தாராள மனப்பான்மையையோ அன்றேல் அவருடைய சிறந்த ராஜ தந்திரத்தையோ நான் குறைத்துப் பேசவில்லை! ஒரு சில வகுப்புவாதிகள் தங்கள் தர்பாரை நடத்தி வந்தபோது ஸ்ரீ சேனநாயகா போன்றவர்கள் எந்த மூலைக்குள் இருந்தார்கள் என்பதைத்தான் நாடு அறியவிரும்புகின்றது. சோல்பெரித் திட்டத்துக்கும் வகுப்புவாதத்துக்கும் எட்டாம் பொருத்தம். ஆகவேதான் சகல வகுப்பினரும் தங்கள் வேற்றுமைகளைப் பாராட்டாது ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமென்று கூக்குரலிட்டது நாட்டின் பலபாகங்களிலும் இப்போது அதிகமாகக் கேட்கின்றது. இது வரவேற்கத்தக்கது தான். ஆனால் புதிய அரசியற் திட்டம் மக்களை எவ்வளவுதூரம் கொண்டு செல்கின்றதென்பதைப்பற்றி அவ்வளவாக ஒருவரும் பேசுவதாயில்லை. குடியேற்றநாட்டு அந்தஸ்தை அடைவதற்கு சோல்பெரித் திட்டம் முதற்படியென ஸ்ரீ சேனநாயகா அட்டதிக்குகளிலும் முரசு கொட்டுகின்றார்.

### தமிழர் பண்பு

ஸ்ரீசேனநாயகா யாழ்ப்பாண மக்களைப்பற்றியும் அவர்களுடைய ஆற்றல், கல்வி, ஞானம், விடாமுயற்சி, மதிநுட்பம், போன்ற சிறந்த பண்புகளைப்பற்றியும் பாராட்டிப் பேசினார். அத்துடன் இலங்கைமக்கள் என்ற சமுதாயத்தை அமைப்பதற்கு யாழ்ப்பாணமக்களின் உதவி அத்தியாவசியமென்பதையும் அழுத்தியிருக்கின்றார். இதைக்கேட்டு ஸ்ரீ பொன்னம்பலம் போன்ற வகுப்புவாதிகள் வருந்துவார்கள். தங்கள் சுயநலக் கோட்டைகளை ஸ்ரீ சேனநாயகா தகர்த்துக்கொண்டுவருகின்றாரேயென்பதை உணர்ந்து கனன்று எரியலாம். "சிங்களர் தமிழர்களிடையே பிளவு இருத்தல் சுத்த முட்டாள்தனமானது. வகுப்புவாதம் மீண்டும் வகுப்புவாதத்தையே உண்டாக்கும் தன்மையது. ஒரு பெரிய சமுதாயமாக இலங்கை மாறிக்கொண்டு வருகையில் வகுப்புவாதம் மூளை கொள்ளுமாகில் நாடு வீழ்ச்சியடைந்தேதீரும். வகுப்புவாதக் கட்சியை ஏற்படுத்துவதற்கு ஒரு பகுதியில் முயற்சிகள் நடைபெறுவதாக அறிகின்றேன். அக்கட்சியின் தலைவர் தோல்வியுற்ற ஓர் இலக்கியத்துக்காகத் அடித்துப்பதைத்து வேலைசெய்தார். அத்துறையில் அவர் இப்போது படுதோல்வியடைந்திருப்பதையும் உணர்வார். இருந்தும் அந்த வெள்ளத்துக்குள் நீந்துவதற்கு ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் பகீரதப் பிரயத்தனங்கள் செய்துகொண்டுவருகின்றார்," எனவும் ஸ்ரீ சேனநாயகா ஒளிப்பு மறைப்பின்றிக் காரசாரமாகப் பேசியிருக்கின்றார்.

தவிர அவர்வேறுமோர்உண்மையைக் கூறினார். அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ், அன்றேல் அதுபோன்ற ஏனைய வகுப்புவாதக் கட்சிகள் தெரிந்து அனுப்பும் அங்கத்தவர்களுடன் சேர்ந்து ஐக்கிய தேசீயக்கட்சி ஒருபோதும் உழைக்கமாட்டாதென்பதுதான் அது.

### வித்தியாசம் என்ன ?

ஸ்ரீ சேனநாயகாவின் பேச்சு அரசியல் வட்டாரங்களிடையே பலவிதமான அபிப்பிராயங்களைக் கிளப்பியிருக்கின்றது. வகுப்புவாதம் நஞ்சுபோன்றதெனக் கண்டிருக்கும் இத்தேசிய வாதி எதற்காக ஐக்கிய தேசியக் கட்சியிற் சிங்கள மகாசபையையும் இலங்கை முஸ்லீம் லீக்கையும் சேர்க்கவேண்டுமென ஒரு சிலர் கேட்கின்றனர். இவ்விரு, வகுப்புவாத ஸ்தாபனங்களும் எவ்வளவுதூரம் தமது கொள்கைகளினின்றும் விலகியிருக்கின்றன. தமிழர்களும் முஸ்லீம்களும் ஒரு அளவுக்கு வகுப்புவாதத்தில் நம்பிக்கை வைத்துத் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்கலாம். ஆனால் பெரும்பான்மைச் சமூகமான சிங்களமக்கள் சிங்களமகாசபைபோன்ற வகுப்புவாத ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பது மிகவும் விந்தையாக விருக்கின்றது.

வகுப்புவாத மந்திரத்தை முணுமுணுத்து வந்த பல கட்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியில் ஆதரவு அளிக்கும் ஸ்ரீ சேனநாயகா—அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் என்ற முதல்தரமான வகுப்புவாதக் கட்சியையும் தம்முடன் சேர்த்துக் கொள்ளலாம் அல்லவா?

### புதிய மார்க்கம்

"ஐம்பதுக் கைம்பது" வேண்டும், இல்லாதுபோனால் மாண்டு மடிந்துபோவோம் என்று அழுது புலம்பிய தமிழர் காங்கிரஸ் இதை இப்போது சுருட்டி வாரிக்கட்டி விட்டு 'முற்போக்கான சிங்களருடன் உழைக்கத் தயார்!' என்று அலறிப் புடைக்கின்றது. 'ஐம்பதுக் கைம்பது' என்று அட்டகாசம் போட்ட இந்தப் பிரகஸ்பதிகளுக்கு முன்னெல்லாம் இப்போதெல்லாம் சமபல பிரதிநிதித்துவத்தைப் பற்றிப் பேசினால், முகத்தைச் சுழித்துக் கொண்டு அப்பாற் போகின்றனர். "என் அப்பா இவ்வளவு அருவருப்பு" என்று கேட்டால் அடிக்கவும் பார்க்கின்றனர்.

இருந்தபோதிலும் தமது பிழையை உணர்ந்து தமிழ்க்காங்கிரஸ் ஒருபடி இறங்கியிருப்பதின் மூலம் இக்கட்சிக்கு எவ்வித முற்போக்கான அரசியற் கொள்கையுமில்லையென்பதும், அரசியற் சந்தர்ப்பவாதிகளாக விருந்து காரியம் பார்த்துக்கொள்வதே இவர்களின் நோக்கம் என்பதும் நன்ருகப் புலனாகின்றது.

இந்த வேடிக்கை ஒருபுறமிருக்க, காங்கிரஸின் தந்தையெனத் திகழ்ந்து தமது சொந்தப் பணத்தையும் வாரி இறைத்த கொழும்பு பிறக்றர் ஸ்ரீ சிவசுப்பிரமணியம், ஸ்ரீ சேனநாயகா ஐக்கியதேசீயக் கட்சியில் நிகழ்த்திய பேச்சைக் கேட்டு ஆனந்தமடைகின்றார். அவருடைய பேச்சுப் பழுத்த அரசியல அனுபவத்தின் விளைவென்றும் சோல்பெரித்திட்டம் வெளியாகிய நாட்களிலிருந்து இதுவரை அதைப்பற்றி வெளிவந்த கருத்துகளிலும் பார்க்க ஸ்ரீ சேனநாயகா கூறியவை மிகவும் முக்கியம் வாய்ந்ததெனவும், ஒருகாலம் தமிழ்க் காங்கிரஸின் செயலாளராகக் கடமை பார்த்த ஸ்ரீ சிவசுப்பிரமணியம் கருதுகின்றார். பத்திரிகைகளுக்கும் இது சம்பந்தமாகத் தமது கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்.

புதிய அரசியல் திட்டத்தில் கூட்டு மந்திரிசபை அமைக்க முடியுமெனத் தமிழ்மக்கள் கருதுவது தவறெனக்கூறி ஸ்ரீ சிவசுப்பிரமணியம் மேலும் தெரிவிப்பதாவது; இவ்வித அபிப்பிராயம் சில தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருக்குமாகில் அவர்கள் நாட்டின் நன்மைக்காக அதைப் பற்றி மீண்டும் ஆலோசிப்பது அவர்களைப் பொறுத்த கடமையாகும். ஸ்ரீ சேனநாயகாவைத் தவிர்த்த வேறெவர் சிங்களத் தலைவர் பிரதம மந்திரியாக வந்தாலும் அவரும் ஸ்ரீ சேனநாயகாவின் கொள்கையைப் பின்பற்றியே கருமம் ஆற்றுவர்.

தமிழரைவிட வேறு எச்சாதியத்தினராவது வகுப்புவாதக் கட்சிகளை ஏற்படுத்தி அந்தக் கட்சிகளின் சார்பாக வரவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்தப் போவதில்லை. இது சகலரும் அறிந்த ஓர் உண்மை. அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் புதிய பாராளுமன்றத் தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்தும் யோசனையை இந்தவேளையிலும் கைவிடலாம். சமமாகத் தமிழர் போட்டியிடலாம்; அல்லது வேறு அரசியற் கட்சியின் அபேட்சகராகத் தேர்தலிற் பங்குபற்றலாம். வகுப்புவாதத் தமிழர் கட்சிக்குச் சோல்பரித் திட்டத்தில் இடமில்லை. வகுப்புவாதத்தை ஊன்றுகோலாகக்கொண்டு புதியபாராளுமன்றத்தில்நுழைவது உலக்கையைத் தாங்கித் தயிர்கடைவதை நிகர்க்கும்.

இன்றைய நிலையில் சோல்பெரித் திட்டத்தை ஏற்று உழைக்க விரும்புவர்கள் ஸ்ரீ சேனநாயகாவின் தயவை நாடலாம். ஐக்கிய தேசீயக் கட்சியுடன் "சேரவாரும் செகத்தீரே" என்று அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார். இதனால் அவர் காட்டும் வழிதான் முற்றும் சரியெனக் கூறவில்லை. அவர் தவறுகள் செய்யும்போது அவரைக் கண்டிக்கப் பொதுமக்களுக்கு உரிமையுண்டு. இலங்கையில் ஏகாதிபத்திய ஆட்சிக்குத் தூபமிடவிரும்புபவர்கள் ஸ்ரீ சேனநாயகாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றலாம்!

## தொகுதி நிர்ணய அறிக்கை

தொகுதி நிர்ணய சபையின் அறிக்கை முழுவதும் வெளியாகி விட்டது. 190 பக்கங்கள் கொண்ட இவ்வறிக்கை 9 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையைப் பல தேர்தல் தொகுதிகளாக வகுக்கும் வேலையில் சபையினர் அடைந்த கஷ்டங்களும் இதிற் காணப்படுகின்றன. சிறுபான்மையினருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கத்தக்க முறையில் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டுமென்ற உத்தரவைச் சிரமேற்கொண்டு தாம் தொகுதிகளை வகுத்திருப்பதாகச் சபையினர் கூறுகின்றனர்.

அவர்களின் கருத்துப்படி பின்வருமாறு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படலாம். இலங்கைத்தமிழர் 13. அத்துடன் குவியல் வாக்கு முறைப்படி வேறொருவருக்கு இடமுண்டு. இந்தியத் தமிழர் 8. முஸ்லீம்கள் 6. கண்டிச் சிங்களர் 25. கீழ்நாட்டுச் சிங்களர் 41.

இலங்கையின் இரண்டாவது பெரிய சமூகத்தினராக விளங்குபவர்கள் தமிழர். இவர்களில் இலங்கைத் தமிழர் 7 இலட்சம். இந்தியத் தமிழர் 9 இலட்சம். இலங்கைத் தமிழர் அதிக காலமாக இந்நாட்டில் வசித்து இலங்கையையே சொந்த நாடாகக் கொண்டுள்ளவர்கள். இரண்டாவது பிரிவைச் சேர்ந்த இந்தியத் தமிழர் தொழிலுக்காக இலங்கையிலே தங்கியிருப்பவர்கள். இவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையைச் சொந்த நாடாகக் கருதுவதில்லை. இந்தியரின் வாக்குரிமை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்தி ஒரு முடிவுக்கு வரவிருப்பதால் இப்போது தொகுதிகள் மாத்திரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக இவ்வறிக்கையின்படி சிறுபான்மைச் சமூகத்தினர் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். பெரும்பான்மையினருக்கு மந்திரி சபையினர் எதிர்பார்த்ததைவிட அதிகமான ஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. இவ்வறிக்கைபற்றி விபரமாக வேறொரு சந்தர்ப்பத்தில் ஆராயப்படும்.

## சுதந்திர வாழ்வின் பெருமை

### பழைய கொள்கைகள் ஒழியவேண்டும்

**வடமராட்சி சமூக சேவா சங்கத்தின் ஆருவது ஆண்டுவிழா சமீபத்திற் கொண்டாடப்பட்டது. விழாவிற்குத் தலைமை தாங்கிய ஈழகேசரி அதிபர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்கள் தமது தலைமையுரையிற் கௌரவமான வாழ்க்கையைப் பற்றியும் சமூகப் பிரச்சினைகளைப்பற்றியும் ஆராய்ந்திருக்கின்ருர்.**

ஒரு நாட்டுமக்களுள் ஒரு கூறு, இன்னல்வாய்ப்பட்டு, சுதந்திரமின்றி, அடிமை வாழ்க்கையை நடத்தும்வரையில் அந்நாட்டு மக்களிடம் சுதந்திர உணர்ச்சி ஏற்படுவதும், அவர்கள் அடிமைத் தளையினின்றும் விடுதலையடைந்து சுதந்திரம் பெறுவதும் அசாத்தியமேயாகும். ஆதலால் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் சம உரிமை ஏற்படுதல் உங்களுக்கு மாத்திரமல்ல, இலங்கை முழுவதற்குமே இன்றியமையாது வேண்டப்படுவதொன்ருகும்.

அடிமை நிலையில் இருப்பது எவ்வளவு அவமானமோ, மற்றவர்களை அடிமைகொண்டு அவர்களை ஒடுக்குவதும் அவ்வளவு அவமானமாகும். இல்லை, பிந்தியது முந்தியதிலுங் கூடிய அவமானம் என்று சொல்வதற்குமேஇடமுண்டு. ஏனெனில் அடிமையாய் இருப்பவன் கதியற்றவன்; அவன் தானே விரும்பி அவ்வடிமைத்தனத்தைத் தேடியவன் அல்லன். அடிமையாய்ப் பிறந்து, அடிமைத்தனத்திலிருந்து, விடுதலைபெற ஆவலுள்ளவனாய் இருந்தும் ஆற்றல் அற்றவனாய் இருக்கிருன். அவனது கதி பரிதாபத்துக்கு இடமானதாகும்.

ஆதலின், உங்கள் விடுதலைக்காக நீங்கள் எடுக்கும் முயற்சி தேசத் தொண்டின்பாற்பட்டது. அம்முயற்சியால் உங்களுக்கு மாத்திரமல்ல, உங்கள் விடுதலைக் கிடையூறு விளைக்கும் மற்றவர்களுக்கும் நன்மை ஏற்படும். உங்கள் விடுதலை இயக்கம் நமது நாட்டிற்கே பல்வேறு துறைகளிற் புத்துயிர் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

### புதிய கொள்கை

இன்றைய உலகில் நடக்கும் இயக்கங்களையும் கிளர்ச்சிகளையும் நீங்கள் சிறிது அருவி ஆராய்வீர்களாயின், நான் முன் கூறியது உண்மையென உணர்வீர்கள். உலகத்தில் எந்தக் கோணத்தைப் பார்த்தாலும் புராதன பௌராணிகக் கொள்கைகள் தகர்க்கப்படுகின்றன. பிறப்பை அல்லது தொழிலை ஒட்டி உயர்வு தாழ்வு பாராட்டும் கொள்கைகள் ஒழிந்து வீழ்ந்துவிட்டன; வீழ்கின்றன. முற்போக்கான நாடுகள் யாவற்றிலும் சமத்துவம், சமரசம், சமதர்மம் என்னும் பதங்களே ஒலிக்கின்றன. இந்தக் கொள்கைகளே மேலும் மேலும் ஓங்கி வளர்கின்றன. பிறப்பினின்று தொழில் வகுக்கும் புராதன ஒழுங்கு இருந்த இடமுந் தெரியாமற் போகின்றது; போய்விட்டது. பிறப்பிற்கும் தொழிலுக்கும் யாதாயினும் ஒரு சம்பந்தமும் இல்லையென்ற கொள்கையே பரம்பி வருகின்றது. மக்களாய்ப் பிறந்த எல்லாருக்கும் பரிபூரண சுயாதீனம் ஏற்படவேண்டுமென்ற உன்னத இலட்சியமே இந்த நாடுகளிற் ருேன்றிய புரட்சிகளுக்கு அடிப்படை. சுயாதீனத்திலும் சமத்துவத்திலும் வேணவாக்கொண்டு நீங்களும் கிளர்ச்சி செய்தால், நமது நாட்டிலும் நமது அடிமைத்தனத்திற்கு முதற்காரணமாய் இருக்கும் பௌராணிக மனப்பான்மை மாறி, இன்றைய உலகிற்கு ஏற்ற முறையில் நம் நாடும் முன்னேற்றமடையும். ஆகையாற்ருன், நீங்கள் புரியுந் தொண்டில் உங்களுக்கு மாத்திரமல்ல, நமது நாடு முழுவதுக்குமே பெரிதும் நன்மை ஏற்படும் என்று மீட்டும் மீட்டுங் கூறினேன். அதனாற்ருன் உங்கள் சமூகத் தொண்டைத் தேசத் தொண்டென்றும் பாராட்டினேன். நிற்க,

### முயற்சியும் சக்தியும்

இந்தப் பழைய பௌராணிக நாகரிகத்தையும் அதற்கு உயிராய் இருக்கும் கண்மூடிக் கலைஞானத்தையும் எங்ஙனம் மாற்றலாமெனுங் கேள்வி உங்களிற் பலருடைய மனதில் எழுந்திருக்கும். இந்த நாகரிகமும் இதற்கு உயிரளிக்கும் தத்துவ சாஸ்திரமும் இன்று நேற்றுத் தோன்றியனவல்ல. தலைமுறை தலைமுறையாய்ப் பல்லாயிரம் ஆண்டுகளாய் நமது நாட்டில் இவை இருந்துவந்திருக்கின்றன. இவற்றின் பண்பு உயர்தரத்தார், நடுத்தரத்தார், கீழ்த்தரத்தார் யாவரின் இரத்தத்துடனும் கலந்து இருப்பதுபோல் வலிபெற்றிருக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டியின் ஆராய்ச்சி

# இயற்கையோ? - - - - செயற்கையோ?

'கசின்'

'குரங்கிலிருந்து மனிதன் தோன்றியிருப்பானா? இது உண்மைதானா? 'டாவின்' ஆராய்ச்சி எவ்வளவு தூரம் பொருந்தும்?' என்ற நீண்ட பிரச்சினையை எனக்குச் சரசுவின் வால் கிளப்பிவிட்டது. சரசுவின் வால் என்றால் உங்களுக்கு எப்படிப் புரியும்.

சரசு தனது கூந்தலைப் பின்னி நுனியில் ஓர் குஞ்சமுங் கட்டி உயர் ஜாதிச் சவாரி யாட்டின் வால்போலத் தொங்கவிட்டுக்கொண்டு திரிகிறாள். அதற்கு வேறெந்தப் பெயர் வைத்தாலும் பொருத்தமில்லை. 'அழகான வால்' என்று குறிப்பிட்டால் அதுவே அர்த்த புஷ்டியுடன் கூடியதாகத் தெரிகிறது.

அந்த வாலைப் பார்த்தால் அவளுக்கு இயற்கையாக முளைத்து வளர்ந்த குஞ்சத்தோடு பொருந்திய வால் என்று சொல்லலாமேயன்றி அவ்வளவும் செயற்கையென்று எப்படிச் சொல்ல மனம் வரும்?

நான் சொல்லிக் கொண்டு போவதைப் பார்த்தால் 'பாண்டிய மகாராசனுக்குத் தன் மனைவியின் கூந்தலின் மணம் இயற்கையானதோ, செயற்கையானதோ? என்று சந்தேகந் தட்டியதைப்போன்ற ஒரு சந்தர்ப்பம் எனக்கும் நிகழ்ந்திருக்கவேண்டும்' என்று நீங்கள் நினைக்கக்கூடும்.

உண்மைதான்; சரசுவின் வால் இயற்கையா, செயற்கையா? என்ற ஒரு பிரச்சினை என் மனதில் எழும்பியது. அப்பிரச்சினையின் தீர்ப்பை உங்கள் மத்தியில் விடுகிறேன்; அழகாக விடுகிறேன்.

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி" என்று சிவபெருமான் தும்பியை வேண்டுமுகத்தால் கூந்தலின் மணம் இயற்கையானதே என்று நிரூபித்தார். சரசுவின் வால் இயற்கையானது என்று என்னால் நிரூபிக்க முடியாது. ஆனால் வாலறிந்த பிரமுகர்களை, வாலுள்ள பிரமுகர்களை இந்த வால் இயற்கையானதாவென்று நான் கேட்கிறேன்.

ஆனால் என்னிடம் பொற்கிழி இல்லை. முன்னுக்கே சொல்லி வைக்கிறேன். சிவபெருமானைப் போய்ச் 'சட்டி'போட நினைக்கிறவர்கள் ஜாக்கிரதை.

குரங்குவால்அறிந்த குறவர்கூட்டமே
ஓடக்கூலி ஒரு'சுவிற்'சன்ன
வாலினைமுறுக்கும் சாரதிக்குழு உவே
பச்சைத்தொழிலாளிக் கிச்சகம்பேசி
முரட்டுவாலறிந்த முதலாளிமாரே
மனைவியின்வாலை மடக்குவதென்றால்
சினிமாவிற்குச் செலவிடுப்பதுவே
என்பதையறிந்த இளங்காதலரே
மாணவர்தன்னை மகிழ்விக்கவிரும்பி
வாலினையறிந்து வளம்படப்பேசி
சாரதித்தொழில்செயும் ஆசிரியக்
குழு உவே
வாலொன்றுமுளைத்து வனைக்கவும்
அறிவன்
என்றுசட்டம்பியார் இயல்புடன்
மொழிந்த
தமிழ்வாத்தியாரே தயவுடன்கேண்மின்
பண்டிதர்வித்துவான் பாரதிபுலவன்
'பீயேயெம்மே பீயோவெல்'லுடன்
பல்வகைப்பட்டமாம்பல்வகைவாலை
பரிவுடன்உருவிப் பார்த்திறுமாந்து
செருவுடன்இருக்கும் குழுவினர்க்
கேண்மின்
உலகத்தின்வாலை உண்மையாயறிந்து
பலகத்திகொண்டு பரிந்துவெட்டிய
திருவள்ளுவரே செந்நாப்புலவரே
கூறமறந்த வாலறிந்தோரே
சந்தியிற்றிரியும் சரசுவின்வாலும்
இயற்கையோசெயற்கையோ வென்று
இதமுடனேயெமக் கறிவிப்பீரே.

## 41-வது புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

1945 இன் பாதுகாப்புப் பிரமாணங்களின் 20-வது பிரமாணப்படி (புடவைக் கட்டுப்பாடு) எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துவான், மதுரை நிற்றிங் கொம்பெனி லிமிற்றெட்டில் செய்யப்பட்டதும் 1946-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் இரண்டாம் திகதிக்குப் பின்னர் இலங்கையில் இறக்கப்பட்டதுமான வேஷ்டுகளை பின்வரும் அட்டவணையின் 2-ம் 3-ம் 4-ம் கோட்டைப் பின் குறிக்கப்பட்ட விலைக்கதிகமாக சில்லறையாக விற்கவோ 'சப்ளை' செய்யவோ விற்க வெளியரங்கமாக வைத்திருக்கவோ கூடாதென இத்தாற் கட்டளையிடுகிறேன்.

2- 15-2-46 ஐக் கொண்ட 206-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டறிவித்தலின்படி இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளாய் ஆகக்கூடிய சில்லறை விலை என்றுங் குறிக்கப்பட்ட இடத்து இக்கட்டளையில் கொடுக்கப்பட்டவை அமைவுடையவை ஆகா.

3. மேற் சொல்லப்பட்ட மதுரை நிற்றிங் கோ லிமிற்றெட்டால் செய்யப்பட்ட பின்னற் வேஷ்டுகளை மொத்த வியாபாரத்துக்கு விற்கும்பொழுது பின் காட்டப்பட்ட அட்டவணையில் குறிக்கப்பட்ட ஆகக்கூடிய சில்லறை விலையை 15% கழிவு செய்து வரும் விலைக்கு மேற்பட விற்கப்படாது.

4. இக்கட்டளையின் பொருட்டு சுங்கசாலையிலிருந்து சரக்கு அகற்றப்பட்ட தினம் இறக்குமதி செய்யப்பட்ட தினமாகக் கொள்ளப்படும்.

### அட்டவணை

இலங்கையில் ஆகக்கூடிய சில்லறை விலை

| அளவு | பி. ஏ. P. A. | தரம் P. 26 | ஆர். ஆர். R. R. |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 28" | ஒன்று 6-57 | ஒன்று 5-56 | 5·37 |
| 30" | ,, 6-65 | ,, 5-64 | 5-47 |
| 32" | ,, 6-73 | ,, 5-74 | 5·56 |
| 34" | ,, 6-82 | ,, 5-83 | 5-64 |
| 36" | ,, 6-90 | ,, 5-93 | 5-74 |
| 38" | ,, 6-99 | ,, 6.02 | 5-83 |
| 40" | ,, 7-07 | ,, 6-12 | 5-93 |

கொழும்பு
1946-ம் ஆண்டு செப்டம்பர் மீ 2-ந் உ

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

"MEDIUM"
Registered Commercial Centre
[Estd. 1929]

Land & Commission Agents

261, Kankesanturai Road
VANNARPONNAI
&
Alaveddy, Chunnakam

For the sale of Houses & Properties, Estates & Fields and for the raising of moneys (any amount) on mortgages please communicate with us. We do the above service on a purely commission basis

Manager
MEDIUM

[2879]

புகையிலைப்பயிர்
செய்வோர்க்கு — ஓர்
விசேஷ அறிவித்தல்

# புகையிலை

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக
எல்லாப் பயிர்களுக்கும்
வேண்டிய பசளைவகைகளை
விநியோகஞ் செய்பவர்களாக
இருந்து வருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு
அவசியமான பசளைகளைப்பற்றி
விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

THE
COLOMBO
COMMERCIAL
COMPANY
LTD.

Incorporated in Great Britain
Liability of Members Ltd.

[2872]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு பாணர்

**பா**ணர் என்போர் பழங்குடிகள். இவர்கள் தமிழர்க்கும் முற்பட்டவர். "பாணன் பறையன் துடியன் கடம்பனென், றின்னான் கல்லது குடியுமில்லை" என்பது தொல்காப்பியச் சூத்திரம். பாணரது தொழில்கள் பல. மீன் பிடித்தல், பாட்டுப் பாடுதல் என்பன முக்கியமானவை.

பழைய தமிழிலக்கியங்களில், தலைவனுக்கும் தலைவிக்கும் ஊடல் ஏற்படும்போது, அவ்வூடலைத் தீர்ப்பதற்காகப் பாணனும் பாடுபடுவது வழக்கம். வீணை வாசித்துப் பண்ணிசைப் பதில் வல்லோராதலின், ஊடல் தீர்க்கத் தலைவனுக்கு, இவர்களை விடச் சிறந்தோர் யார்? தலைவியைப் புகழ்ந்துபாடித் தலைவனது பிழையைப் பொறுத்துக்கொள்ளுமாறு இரந்து வேண்டுவர்.

இந்தப் பாணர்களது தொழிலை, சுந்தரமூர்த்திநாயனரது வேண்டுகோளின் மீது (வேண்டுகோள் என்று சொல்வதிலும் பார்க்கக் கட்டளை என்று சொன்னாலுந் தகும்) சிவபிரானே ஒருமுறை செய்திருக்கிறார். அதனால் இந்தத் தொழில் இழிந்தது என்று ஒருவரும் நினைக்க வேண்டியதில்லை. தொழில் செய்பவர்களில் இழிவும் உயர்வும் உண்டே தவிர, தொழிலிலே உயர்வு இழிவு கிடையாது.

* * *

**பா**ண்டியன் தனது அருமைக் குமாரத்தியைச் சோழனுக்கு விவாகஞ் செய்துகொடுத்தான். அப்படிக் கொடுத்தபோது ஏராளமான பொருள்களையும் சீதனமாக வழங்கினான். இவையும் போதாவென்று நினைத்தோ என்னவோ, தனது குமாரத்திக்குத் தமிழ் கற்பித்தவரும், தனது ஆஸ்தான வித்துவானுமாகிய புகழேந்திப் புலவரையும், கூட அனுப்பினான்.

சோழனுடைய ஆஸ்தானப் புலவர் ஒட்டக்கூத்தர். இவருக்கு இயல்பாகவே பொருமை உண்டு. புகழேந்திமீதோ எல்லையில்லாத பொருமை. 'வித்துவக் காய்ச்சல்' என்றுஞ் சொல்லலாம். மற்றச் சாமானிய புலவர்களைப் போலப் புகழேந்தியையுமதித்து, அவரை அவமானம் பண்ணி, சிறையிலே அடைத்தும் வைத்துவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட சோழன் மனைவி—பாண்டிய ராஜகுமாரி—க்கு ஆத்திரம் தாங்க முடியவில்லை. தனது பாண்டிய நாட்டை, தனது தந்தையை, எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னையே அவமானப்படுத்தியதாக மதித்துக் கோபங்கொண்டாள். கோபங்கொண்டுஎன்னசெய்வது?

சிறைச்சாலைக்குப் போய், புகழேந்தியை விடுவிக்கமுடியுமா? அது அவளது அந்தஸ்துக்கு ஏற்ற செய்கையா? 'அந்தஸ்துக்கிடக்கிறது' என்றுவைத்துக்கொண்டு, அப்படியே செய்ய முயற்சித்தாலும், ஒட்டக்கூத்தன் அவளது வார்த்தைக்கு உடன்பட்டு, புகழேந்தியை விடுதலை செய்வானென்று எப்படி எதிர்பார்ப்பது? புகழேந்தியை விடுதலை செய்வதற்குப் பதில், அவளையுஞ் சேர்த்து அவமானப்படுத்திவிடக்கூடுமல்லவா?

**பு**கழேந்தி சிறையிடப்பட்ட விஷயத்தைத் தந்தைக்கு அறிவிப்பதென்பதும் செய்யக்கூடிய காரியமல்ல. ஏனென்றல், புகழேந்தியை அவளோடல்லவா பாண்டியன் அனுப்பியுள்ளான்? புகழேந்திக்கு வரும் நன்மை தீமைகளைக் கவனிக்கவேண்டியது அவள் பொறுப்பல்லவா? அன்றியும், "இந்தச் சின்னக் காரியத்துக்காக அப்பாவிடம் முறையிட்டுக்கொண்டாயா?" என்று கணவன் கேலி செய்யவுங் கூடும்!

வேறு என்னதான் செய்யலாம்!

கணவனிடமே முறையிடலாமென்றலோ, அதிலும் அவ்வளவு நம்பிக்கை தென்படவில்லை. சோழனுக்குத் தனது ஆஸ்தான வித்துவானன ஒட்டக்கூத்தரிடம் அளவுகடந்த மதிப்பு அந்த மதிப்புக்காரணமாக, தனது சொல்லைக் கேட்காமல் அலக்ஷியஞ் செய்யவுங் கூடுமல்லவா? அப்படி அலக்ஷியஞ் செய்தால், அதை அவ

## இரசிகன்

ளாலே பொறுத்துக்கொள்ள முடியாது. பிறகு, குடும்பமே பிரிந்துபோகவேண்டியும் ஏற்படலாம்! சே, சே, அது கூடவே கூடாது!

ஒன்றுஞ் செய்ய முடியாத இடத்து, பெண்களுக்கு ஏற்படும் ஊடல் அவளிடமும் ஏற்பட்டது. ஒட்டக்கூத்தன் செய்த பிழையைத் தனது கணவனே செய்ததாக எண்ணினள். 'சரி, அவர் வரட்டும்! இன்று ஒரு பாடம் படிப்பிக்கத்தான் வேண்டும்' என்று கறுவிக்கொண்டு, தனது சயன கிருகத்து அறைக் கதவைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டாள்!

* * *

**ம**ணஞ்செய்து இன்னும் பல காலமாகவில்லை. சோழனுக்கும், தனது மனைவியிடமிருந்த ஆசை சற்றேனும், இன்னும் குறையவில்லை. இராச்சிய பாரத்திலே கூட அவனுக்கு அவ்வளவு நாட்டமில்லை! தனது ராஜாங்க அலுவல்களை விரைவாக முடித்துக்கொண்டு, அந்தப் புரத்தை நோக்கி விரைந்துவந்தான். தனது அலுப்பும், கவலையும், அவளது முக தரிசனங் கிடைத்த அளவில் நீங்கிவிடும் என்று நினைத்தவன்போல அவசரப்பட்டு வந்தான். அவளது இனிய குரலைக் கேட்கத் தாகங்கொண்டு வந்தான்.

கதவு சாத்திக்கிடந்தது!

சாதாரணமாகச்சாத்தப்பட்டிருக்கிறதாக்குமென்று நினைத்து, மெதுவாகத் திறப்பதற்காக, கதவின் மேலே கையை வைத்தான்.

உள்ளே தாழ்ப்பாள்!

அவனுக்கோ என்ன செய்வதென்றே தெரியவில்லை. இது வழக்கமில்லாத வழக்கமாயிருக்கிறதே என்று அதிசயித்தான்! தனது வரவுக்காக எந்நாளும், இலவுகாத்த கிளி போலக் காத்திருக்கும் அவள் இன்று கதவைச் சாத்தியிருப்பதன் காரணமென்ன? ஆள் உள்ளேதான் இருக்கிருள் என்பதற்கு அடையாளமாக பெருமூச்சுக்கேட்டது. தலையணைகளை எடுத்தெறியும் சத்தம் கேட்டது. அமைதியில்லாமல் மேலுங்கீழும் நடப்பதும் தெரிந்தது. வெளியில் நின்றபடியே எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தான்! ஒருபதிலும் இல்லை.

தானேதாவது பிழை செய்திருக்கக்கூடுமோ என்று நன்ருக யோசித்துப் பார்த்தான். அப்படி ஒன்றுமே தென்படவில்லை. ஊடலைத் தணிக்க என்ன செய்யலாம் என்று யோசித்தான். உடனே பாணனின் நினைவும் உதித்தது. ஒட்டக்கூத்தனையே பாணனுக்கத் தீர்மானித்தான். அரசனது அந்தஸ்துக்கு ஏற்ற பாணன் ஒட்டக்கூத்தனேயல்லவா? அன்றியும் ஒட்டக்கூத்தனது வாக்குச் சாதுரியத்தில் அவனுக்கு எப்போதுமே நம்பிக்கை. இந்தத் தருணத்திலே அந்த வாக்குச் சாதுரியத்தைஉபயோகிக்காதுவிட்டால்வேறுஎப்போதுதான் அது உபயோகிக்கப்படும்?

உடனே ஒட்டக்கூத்தர் அழைக்கப்பட்டார். சுருக்கமாக அவரிடம் அரசன் விஷயத்தைக் கூறினன். எந்த விதப்பட்டும் மனைவியின் ஊடலைத் தணித்துவிட வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டான். ஊடலின் காரணம் ஒட்டக்கூத்தருக்கு உடனேயே விளங்கிவிட்டது. புகழேந்தியைச் சிறையிட்டதுதான், பாண்டிய ராஜ குமாரியின் கோபத்துக்குக் காரணம் என்று ஊகித்தார். ஆனல் புகழேந்தியைச் சிறைவிடுக்கவும் இஷ்டமில்லை. தனது வாக்குச் சாதுரியத்தினல் ஊடல் தணிந்துவிடும் என்று எண்ணியிருக்கலாம்.

பின்வரும்பாடலைப்பாடினர்.

"நானே யினியுன்னை வேண்டுவ தில்லை நளினமலர்த்
தேனே கபாடந் திறந்திடு வாய்திற வாவிடிலோ
வானே றனைய விரவிகு லாதிபன் வாயில்வந்தாற்
ருனே திறக்குநின் கைத்தல மாகிய தாமரையே."

**பா**வம், ஒட்டக்கூத்தருக்குப் பெண்களின் இயல்பே தெரியவில்லை. 'திறந்திடுவாய்' என்று கட்டளையிடுவது மெத்தப் பிசகான காரியமென்பதை அவர் உணரவில்லை. சோழனை வர்ணித்தவிதமும் ஏற்றதல்ல என்பதும் அவருக்கு விளங்கவில்லை. சோழனை 'சூரியகுல அதிபன்' என்று வர்ணிப்பதன்மூலம், பாண்டிய குல குமாரியாகிய தன்னை இழிவுபடுத்துவதாக, அவள் நினைக்கக்கூடும் என்றும் யோசிக்கவில்லை. 'தானே திறக்கும்' என்று கூறியதுகூட, அவளது ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்தும் என்றுகூட அவர் நினைக்கவில்லை. 'தேனே' என்றும், 'கைத்தலமாகிய தாமரையே' என்றும் புகழ்ந்து கூறிவிட்டால் போதுமென்று நினைத்தார்போலும்!

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க)

# கவிதானே?

"நவபாரதி"

கீதம் பாடும் பொன்வண்டே!—உன்
கானத் திற்கோர் நிகரில்லை
ஏதம் சொல்வார் இங்கில்லை—ஆ!
இதல் லோகல் இசையின்பம்.

கவிஞன் இயற்கையை நோக்கின்ருன்—அக்
களிப்பி னுல்மெய் மறக்கின்ருன்
கவிகள் பற்பல புனைகின்ருன்—நற்
கற்பனை யுலகில் வசிக்கின்ருன்.

காவைத் தேடிச் செல்கின்ருய்—பல்
பூவின் மதுவை உண்கின்ருய்
பாவைப் பாடி உழல்கின்ருய்—அப்
பேரின் பத்தில் திகழ்கின்ருய்.

புதுமையைத் தேடி அலைகின்ருன்—அப்
புதுமையை அள்ளிக் குடிக்கின்ருன்
புதுமையி லேமெய் மறக்கின்ருன்—இன்
புதுமைக் கவிதை பயக்கின்ருன்.

தேமலர் தேடி அலைகின்ருய்—நீ
தேனை நன்ருய்க் குடிக்கின்ருய்
தேனுல் மயங்கிக் கிடக்கின்ருய்—பைந்
தேன்போற் கீதம் இசைக்கின்ருய்.

கற்பனை யுலகிற் சஞ்சரிக்கும்—அக்
கவிஞன் றனக்கும் உன்றனுக்கும்
பற்பல வகையில் ஒற்றுமைதான்—இப்
பாரினில் நீயுங் கவிதானே?

புறநானூறு - 4

# ஒப்புரவின் எல்லை

**இ**ன்று 'தியாகம்' பேசப்படுகிறது. எங்கும் தியாகத்தின் சிகரங்கள் காணப்படுகின்றன. தமிழ் கூறும் தொண்டும், நாயன்மார் கூறும் பணியும், வள்ளுவர் கூறும் ஒப்புரவுமே 'இன்றைய தியாகம்'. வள்ளுவர் வகுத்த தவம்; அறவு இவையே 'தியாகத்தின் சிகரங்கள்' அவற்றை ஆராய்ந்தால்; வாழ்ந்தால் தியாகத்தின் சிகரமேறலாம்; சிகரமாக வாழலாம்.

ஒப்புரவென்பது ஓரணு மிட்டாயா என்ன? வாயிற் போட்டுச் சுவைத்து மகிழ்ந்து மறந்து போக! அது அமிழ்தம். தேவர்களுக்குத் (உண்மை மனிதர்) தான் கிடைக்கும், அவரே அதனைப் பெற வல்லவர். ஒப்புரவற்றவன் உண்மை மனிதனுக மதிக்கப்படமாட்டான். உண்மை மனிதரே ஒப்புரவாற்ற வல்லவர். ஆகலின் மனிதனின் முடிந்த நிலை; உண்மைநிலை—ஒப்புரவு.

ஒப்புரவென்ருல் என்ன? அது வாழ்க்கை. அதனை வாழ இவ்வுடல்; நம் பொருள் இவை தடையாமாயின் அதாவது இவற்றை விற்றும் விட்டும் உண்மை மனிதத் தன்மையைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய நிலையுறுமானல் சிறிதும் தயங்காமல் தன் உடலை நீத்தும் (இறந்தும்), தன் செல்வத்தை விற்றும் உண்மை மனிதனய் வாழ்தலே 'ஒப்புரவாம்'. தமிழ் வள்ளல்கள் வாழ்வும், அரிச்சந்திரன் அரசைத் துறந்த கதையும் இவ்வொப்புரவின் இரு நிலைகட்கும் எடுத்துக்காட்டுக்களாம்.

'ஒப்புரவி னல்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து'

என்ற குறளின் முடிந்த உண்மை அதுவேயன்ரே?

தமிழில், பொருட்கொடையின் வழியேதான் 'ஒப்புரவு' விளக்கப்படுகின்றது. அதனல், பிறர்க்குக்கொடுத்துதவுவதே 'ஒப்புரவு' எனக் கொள்ளலாகாது. வாழ்வில், மதம், [illegible], [illegible] முதலிய [illegible] துறைகளிலும் தமது செல்வம், நேரம், அறிவு, பண்பு, உயிர் இவையெல்லாவற்றையும் ஈடுபடுத்தி, நாட்டிற்கெனவே வாழ்வோர் எண்ணில்லாதவர் இருக்கின்றனரே. அவரெல்லாம் 'ஒப்புரவில்லாதவர்' எனக் கூறிவிடலாமா? அவர்கள் யாவரும் ஒப்புரவாளரே. ஆதலாலேயே ஒப்புரவென்ருல் வாழ்க்கை அல்லது கொள்கைக் குயிர்கொடுத்தல் என்கிறேம்.

**புலவர், மு. கோவிந்தசாமி**

ஒப்புரவில் அரை குறை என்பதே இல்லை. எல்லாம் 'முழுவதும்' என்ற கருத்தில்தான் அரைகுறையும் முழுமையை நோக்கி முன்னேறினல் நன்றே. செல்வம், நேரம், அறிவு இவை முழுவதையும் பிறர்க்கு அளித்துவிடும்போதே உண்மையான் ஒப்புரவு நிலைக்கிறது. ஏதோ ஒரு பகுதி செல்வம், வாழ்வில் கொஞ்சநேரம் பிறர்க்காகவென்ருல், அது பெரிதும் தன்னலமாகவேயிருக்கும் அல்லது தன்னலத்திற் சேர்ந்துவிடும்.

தக்கார்க்கு (நாடு உயரும் நெறியில்) ஒப்புரவு செய்யும்பொருட்டே மனிதன் முயற்சிசெய்து சம்பாதிக்க வேண்டும் என்பதே வள்ளுவர் உள்ளம். தாளாற்றித் தந்த பொருளெல்லாம் எனும் போது 'எல்லாம்' என்பதில் அரைகுறைப்பேச்சு அறுத்தெரிக்கப்படுகின்றதைக் காண்கிறேம். இருபது கோடி ரூபாயுள்ள ஒருவன் இரண்டு லக்ஷம் ரூபாய் கல்விக்குக் கொடுத்தானெனில் அது 'ஒப்புரவா' என்பதனை ஆராய்ந்தே காணவேண்டும். ஏன்? அதன்பின் ஐந்து லக்ஷ ரூபாய், 'தான் கொடையாளி' என்ற புகழைக்கொண்டு பெருக்கிக் கொள்ளலாம் என்ற எண்ணம் ஒளித்துக்கொண்டிருந்தால்! இன்று உலகில் 'ஒப்புரவு' அப்படியும் உயர்ந்து வருதலைக் காண்கிறேமாகையாற்ருன் அதனைக் கூறுகிறேம். 'ஆய்' என்ற வள்ளல் கொடுத்துக் கொடுத்துத் தனது அரண்மனை மகளிர் தாலியைத் தவிர மற்றன எல்லாவற்றையும் அழித்துவிட்டான் எனவே புறநானூறு பேசுகின்றது.

'மகளிர்தோல் அளவல்லதை
நினதென இலைநீ
பெருமிதத்தையே'

எனவே அதிகமான் என்ற வள்ளல் போற்றப்படுகிருன். அவனுக்கென உள்ள சொத்து அவன் 'மனைவியின் தோள்' தானும். நாம் இன்று மதிக்கிறேமே 'அவன் பெண்டாட்டி கழுத்தில் 25 பவுண் இருக்கிறது' என்று. அதுகூட இல்லை அதிகமானுக்கு.

என்றும் நாட்டிற்கே நினைத்துக்கொண்டிருத்தல் உயர்வு. செய்வது பின்னராயினும் முதலில் எண்ணம் வேண்டும். சிலர் நாட்டிற்கெனப் பொருளைக் கொடுப்பர். ஆனல் ஒரு சில நேரத்தையும் செலவழிக்கமாட்டார். ஐயா! என்னைப் பணங் கேட்கிறீர்களா? ஏதேனும் கொடுத்துவிடுகிறேன் மற்றும்படி ஏதும்என்னல்முடியாது என்னும் செல்வச் சான்ரேர் இந்நாட்டில் சால உளர். ஏன் அவர்கள் அப்படிக் கூறுகின்றனர்? பணத்தைக் கொடுத்துவிட்டால் புகழுக்குப் புகழ். அதற்கென உழைக்கவேண்டிய நேரத்தில் அதனினும் இருபங்கு செல்வமும் சேர்த்து விடலாம். தம்முடைய உழைப்பை, வந்து கொடைகேட்ட தொண்டர் செய்துவிடுகின்றனர். தாமும்அப்பணியில் காலத்தைச் செலவழித்தால் உள்ளபொருளும் போய்,பொருள் ஆக்கும் பொழுதும் போய்விடுகிறதல்லவா? ஆகவே, மேற்கூறிய ஒப்புரவையும் ஓர் வாணிபமாக வைத்துள்ளோர் பலர்.

இன்னும் பல அறிவாளிகள். அவர்கள் பெரியர். பொழுதெல்லாம் நாட்டின் உரிமைக்கும், உணர்ச்சிக்கும் மாருக உழைப்பது; அரசியலில் பெரிய பெரிய அலுவல் (உத்யோகம்) பார்த்து வேண்டிய பொருளைத் தேடிக்கொண்டு, அப்பொழுதில் மக்கட்கு எதிராக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் செய்வது: 50, 60 ஆண்டு (வயது) ஆன பின், வேண்டிய பணம் திரட்டிக்கொண்டு, தொண்டில் (தியாகத்தில்) புகுவது. முன்னரே நாட்டில் எப்படியோ அறிவாளியென மதிக்கப்பட்டவரல்லவா? அவர்பொதுநலத்திற்குவருகிருரெனில்பழைய பணியாளர்க்கும் அளப்பற்றவிருப்பம்; அவர்க்கு வரவேற்பு. தம்கட்சியில் சேர்த்துக்கொள்வது. மாலை போட்டுப் பேசச்சொல்வது. தியா

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம்: விய, ஆவணி ௩௦

## இன்னும் வகுப்புவாதமா?

பல்வேறு வழிகளில் உலகம் மாற்றமடைந்து செல்லும் இக்காலத்தில், இலங்கை வாசிகளும் தமது கொள்கைகள் நோக்கங்கள் என்பனவற்றைத் திருத்தியமைப்பது அவசியமாகின்றது. என்றும் பழைய முறைகளையும் உபாயங்களையுந் தழுவி நின்று பயன்பெறலாமென்ற நோக்கத்தை இனி முற்ருக விடவேண்டியதுதான். எல்லா நாடுகளுஞ் சுதந்திரத்தைப் பெற்றுத் தத்தம் நாடுகளைப் பரிபாலிக்கும் பொறுப்பினைப் பெறும் இச் சமயத்தில், வேற்றுமைகளும் அபிப்பிராய பேதங்களும் நிலவுவது, ஒரு நாட்டின் முன்னேற்றத்துக்கு அறிகுறியாகா. இதுவரையும் எல்லா அதிகாரமும் பிரிட்டிஷார் கையிலேயே இருந்தது. எனவே, தேசத்திலுள்ள கட்சியினரும், வகுப்பினரும் அவர்களைத் திருப்தி செய்து விசேஷ சிலாக்கியங்களைப் பெறுவதில் முனைந்துநின்று போட்டியிட்டனர். ஆனல், இப்பொழுது படிப்படியாக விரைவில் முழு அதிகாரத்தையும் தேச மக்கள் பொறுப்பில் விடப் பிரிட்டிஷார் சித்தங்கொண்டுள்ளார். இலங்கையில் மாத்திரமல்ல; இந்தியா, எஹிப்து, பாலஸ்தீனம் முதலிய நாடுகளையும் பூரண சுதந்திரம்பெற்றநாடுகளின் நிலையில் வைக்கப் பிரிட்டிஷ் அரசினர் ஒருப்பட்டு, அதற்கியைய நடபடிக்கைகளைக் கையாள்கின்றனர். இதைப்பற்றி இனிச் சந்தேகப்படவேண்டியதில்லை.

இச் சந்தர்ப்பத்தில், இலங்கைவாசிகள் தமது கடமையாதென நுணுகியறிந்து, அதைச் சிரத்தையுடன் செய்வதே வேண்டற்பாலது. இலங்கையரசாங்கம் முற்று முழுதாக இலங்கை மக்கள் கையிலேயே வந்துவிட்டது. நாம் எதற்கும் இனிப் பிரிட்டிஷாரை நோக்கவேண்டியதில்லை. ஆகையால் அரசியல் விஷயங்களில் வகுப்புவாதத்தை ஒழித்து யாவரும் ஒத்துழைப்பதே வேண்டப்படுவதாகும். புதிய தேசாளுமன்றத்துக்கு முஸ்லீம் சங்கம், சிங்கள மகாசபை முதலிய வகுப்புவாதச் சங்கங்கள் அபேட்சகர்களை ஏற்படுத்தப் போவதில்லையாம். இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்தோர் வகுப்புவாதத்தை மேற்கொள்ளாத எந்தக் கட்சியிலுஞ் சேர்ந்து புதிய தேசாளுமன்றத்தின் அங்கத்துவத்தை நாடலாம். ஆனல் தமிழ்க் காங்கிரஸ் சபை மாத்திரந் தான் தமது ஸ்தாபனமூலமாகப் பிரதிநிதிகள் செல்ல வேண்டுமென்று முனைந்து நிற்கின்றது.

வகுப்புவாதத்தையே இன்றும் ஆர்வத்துடன் பிரேரித்து நிற்கும் தமிழ்க் காங்கிரஸ், புதிய தேசாளுமன்றத்துக்கு அங்கத்தவர்களை அனுப்புவதால் அடையும் பயன் யாதென்பது நமக்குத் தெரியவில்லை. இக்காங்கிரஸ் அனுப்பும் அங்கத்தவருடன் வேறு எந்தக் கட்சியினரும் சேர்ந்து உழைப்பாரென நம்புதற்கு முற்ருக இடமில்லை. மேலும் இவர்கள் மந்திரிபதவிகளைப் பெற்று அரசாங்கத்தில் ஒத்துழைக்கவும் வசதி ஏற்படாது. அப்படியாகவே, பலமற்ற எதிர்க்கட்சியினராக நின்று இடைவிடாது ஓலமிட வேண்டியதுதான். இவர்கள் மீது கருணைகாட்ட எவரும் வரப்போவதில்லை. இதுவரையும் குசலம் விசாரித்து வந்த பிரிட்டிஷாரும் இல்லாதவராய் விடுவர். எல்லா வகுப்பினரும் வகுப்புவாதத்தைத் தவிர்த்துத் தேசிய வாதத்தை மேற்கொள்ள, தமிழ்க்காங்கிரஸ் மாத்திரம் இலங்கைத் தமிழர்களைக் காட்டுமார்க்கமாகக் கொண்டு செல்வது எவ்வளவு பிற்போக்கான செயலாகும். என்றும் தாம் பிடித்த கொள்கையை விடாது நிற்பின், தமது தலைமைக்கு ஈடாட்டம் வராதென திரு. G. G. பொன்னம்பலமவர்கள் எண்ணுகின்றனர் போலும். தமது தலைமையைப் பாதுகாத்தற்பொருட்டு தமிழ்ச் சாகியத்தவரைப் பாழ் நிலையில் தள்ளிவிடுவது முறையாகுமா?

பெரும்பான்மைக் கட்சியினராகும் சிங்களமக்களும் அவர்கள் தலைவர்களும் இதுவரையில் பிழையாக நடந்திருக்கலாம். ஆனல், இப்போது அவர்கள், பழைமையை முற்ருக மறந்து புதிய சகாப்தம் ஏற்படுங்கால், நிதானமாக நடப்பதாக உறுதிகூறுகின்ருர்கள். தம்முடன் ஒத்துழைக்கும்படி விசுவாசத்துடனும் ஆர்வத்துடனும் கேட்கின்றனர். என்றும் தமிழராகும் நாம் அவநம்பிக்கையுடையராய்த் துவேஷத்தைப் பாராட்டி நிற்பதும் முறையன்று. அப்படிச் செல்லின் தமிழராகும் நமது கதியும் இலங்கையின் வருங்காலமும் கவலைக்கிடமான நிலையை அடையுமே. ஆகையால், இந்த அரிய சந்தர்ப்பத்தில் வகுப்புத் துவேஷங்களை யுண்டாக்கும் வாதங்களையும் பிரசாரங்களையும் ஒழித்து, இலங்கைமக்கள் யாவரும் ஒத்துழைக்க முயல்வதே முறையாகும். காலத்துக்கு ஏற்கத் தமிழரின் தலைவர்கள் விஷயங்களை நன்று ஆலோசித்துச் செய்ய வேண்டியதைச் செய்வதே விரும்பப்படுவது. என்ன கூறினும் திரு. பொன்னம்பலமவர்கள் தமது வழியைக் கைவிடரென்பது பலர் கருத்து. இந்தியாவில் வகுப்பு வாதத் தலைவராக விருக்கும் ஜனப் ஜின்னுவின் விஷமப் பிரசாரங்களின் பெறுபேறுகளை நாம் இன்று கண்டு கொண்டிருக்கின்ருேம். ஈற்றில் அவைகளின் கதி யாதாகுமென்பதும் ஆழ்ந்த அறிவுடையார்க்குத் தோன்ருதிரா. அப்படியே, வேண்டுமென்று பிடிவாதமாக நிற்கும் திரு. பொன்னம்பலமவர்கள் தலைமையில் நடக்கும் இயக்கமும் முடிவடையின் அது நூதனமாகாது. ஆகையால், தமிழ் மக்களும் அவர்களின் உண்மைத் தலைவர்களும் விழித்தெழுந்து இச் சமயத்தில் நமது கதி பாழ்போகா வண்ணம் காப்பாற்ற முன்வருதல் வேண்டும்.

### வீண்மனோரதம்

இந்தியாவில் வகுப்புவாதத் தலைவராகும் ஜனப் ஜின்னுவின் பிற்போக்கு முறையால் வரும் தீமைகளைப் பொதுவாக யாவரும் அறிவர். பிரிட்டிஷார் ஒருபோதும் சுதந்திரத்தை இந்தியாவுக்கு அளிக்காரென்று எண்ணியே எப்போதாவது கிடைக்கவியலாத கோரிக்கைகளை ஜனப் ஜின்னு கிளப்பிவந்தனர். ஆனல், பிரிட்டிஷார் சுதந்திரத்தை இந்திய மக்கள் கையில் வழங்கி விட்டு நாட்டினைவிட்டு வெளியே போகச் சித்தமென்பதைச் செய்கையிற் காட்டிவிட்டனர். அதைக்கண்ட ஜனப் ஜின்னு பேரதிசயமடைந்தார். நம்பி மோசம் போனர். என்றுங் கிடைக்காதிருக்கும் 'பாக்கிஸ்தான்' கோரிக்கையை என்ன செய்வதென்று அறியாமல் முட்டுப்படுகின்ருர். அவமானத்துக்கஞ்சி அந்தக் கோரிக்கையையும் இடைக்கிடை ஞாபகப்படுத்திக் கொள்கின்றனர். காங்கிரஸ் கட்சியினருடன் புதிதாகச் சமரசப் பேச்சு லண்டன் நகரில் ஆரம்பிக்கப்படின் தாம் சமுகமளிக்க ஆயத்தமென்கின்ருர். லண்டன் சென்று பேச்சு நடத்தினல் மிஸ்டர் சேர்ச்சில் துரையின் உசாத்துணை கிடைக்குமென்று எண்ணுகின்ருர் போலும். ஆனல் இந்த வகுப்புவாதத் தலைவர் 'பாக்கிஸ்தான்' மாத்திரமன்றி எதற்கும் இணங்காதிருக்கும் வரையில் எங்கு பேச்சு நடந்தாலும் என்ன பயன்? காங்கிரஸ் சபையும் முஸ்லீம் சங்கமும் தம்முள் இணங்கவியலாது போனமையால் பிரிட்டிஷ் அரசினரே இப்போது இந்திய சுதந்திர விஷயமாகத் தீர்ப்பு அளித்தனர். மறுபடி சமரசப் பேச்சினை ஆரம்பித்தாலும் இப்போதைய நிலைமையே வந்தெய்தும். தொழிற்கட்சியரசினர்க்கு அனுபவமில்லையென்று ஜின்னு கவலையடைகின்ருர். பிற்போக்குக் கட்சியும் அதன் தலைவராகும் மிஸ்டர் சேர்ச்சில் துரையும் அரசியலதிகாரத்தை வகித்திருப்பின் தமது எண்ணம் பலித்துவிடுமென இவர் நினைப்பது எவ்வளவு தவறு? அவர்கள் ஒருபோதும் இந்தியாவுக்குச் சுதந்தரத்தை அளிக்கமுன்வரமாட்டார்களென்றும், இந்தியாவைத் தமது அடிமையாக வைத்திருந்து அந்நாட்டின் செல்வத்தை உறிஞ்சிக் கொண்டே நிற்கவேண்டுமென்பதும் அவரின் மனப்பூர்வமான கொள்கை. ஆகையால் வீண் மனோரதங்களைக் கைவிட்டுக் காங்கிரஸ் கட்சியினருடன் ஜின்னு இணக்கமடையின் எவ்வளவு நன்மையாகும். பாமர சனங்கள் மனதில் ஆவேசத்தைக் கிளப்பக்கூடிய பேச்சுகளைப் பேசுவதால் ஜின்னுவும் அவர் சகபாடிகளும் பெருந் தீமையையே இந்தியாவுக்குச் செய்கின்றனர். பிரிட்டிஷ் அரசினர் 'பாக்கிஸ்தானை' ஒருபோதும் வழங்காரென்பதை இன்னும் ஜின்னு அறிந்துகொள்ளவில்லை. இந்துக்களாவது காங்கிரஸ்சபையினராவது என்ன நிகழினும் இந்தியாவைக் கூறுபோடுவதற்கு இணங்கமாட்டார் என்பதையும் இவர் உணர்கின்ருரில்லை. இனியாவது உண்மையை உணர்ந்து உயரியவழியில் உழைக்கச் சித்தப்பட வேண்டாமா? இராசப்பிரதிநிதியுடன் கலந்து பேசி இணக்கத்துக்கு வரின் இந்தியாவின் வருங்காலம் எவ்வளவு மகத்தானதாகும். முஸ்லீம் சங்கத்தினரின் ஆதரவை என்றும் பண்டிதர் நேரு பெற ஆயத்தமாகவிருக்கின்றனர். எனவே கிடைக்கவியலாத கோரிக்கைகளை வாதித்து ஜின்னு அவர்கள் தலையை உடைப்பதைவிட்டு நிதானமான வழிச்சென்று சமரசத்தை நாடுவதே முறை. அப்போதுதான் [illegible] மீட்சிக்காலம் தோன்றும்.

# பாதை ஓரத்தில்

★

பாட்டைசாரி

யாழ்ப்பாணமக்கள் ஒரு தினுசானவர்கள். பணத்திலே கவனம். பாடுபட்டு உழைப்பார்கள். அத்துடன் வட இலங்கையின் வரண்ட சுவாத்தியமோ என்னவோ, பரந்த மனப்பான்மையும் அப்படியும் இப்படியுந்தான். ஆனல் நல்லதென்று தோன்றுபவற்றைப் பிடித்துக்கொள்ளுவார்கள். உதாரணமாக, இலவசக் கல்வியை எடுத்துக்கொள்ளுவோம். இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் இலவசக் கல்வியின் நன்மை தீமைகளைப்பற்றிப் பிடுங்குப்பட்டுக்கொண் டிருக்கையில் யாழ்ப்பாணம் அதைப் போதியமட்டும் ஆதரிக்கின்றது.

இதைக்கண்டு, கல்வி மந்திரி கூடப் பரவசமடைகின்ருர். இலங்கையில் 175 ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் இலவசக் கல்வித்திட்டத்தை ஏற்றிருக்கின்றன. அவற்றுள் யாழ்ப்பாணப் பள்ளிக்கூடங்கள் 82.

கல்வி மந்திரியின் முத்தாரம் எங்களுக்கு வேண்டாமென்று சொல்லி 119 பள்ளிக்கூடங்கள் பிள்ளைகளிடம் பணம் அறவிடுகின்றன. இப்படி மேல்ஸ்தாயியைச் சேர்ந்த பள்ளிக்கூடங்கள் இரண்டே இரண்டுதான் வட இலங்கையில் உண்டு.

யாழ்ப்பாணத்தார் காரியக்காரர். நன்மைதரும் விஷயங்களைக் கை நழுவ விடார்கள். அதேபோல உண்மையான நிலைபரத்தையறிந்தவுடன் தவருன பாதைகளினின்றும் விலகியுங் கொள்வார்கள்.

### பிச்சைவேண்டாம்...

உண்மை நிலையை அறிந்தவுடன் யாழ்ப்பாணத்தவர்கள் செத்துப்போன எருதைவிட்டுக் கழரும் இலையான்கள்போலத் தவருன ஸ்தாபனங்களையும் வழிகளையும் விட்டு ஓடிவிடுகின்றனர் என்று கூறினேன். ஆமாம், அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் என்ற ஓர் வகுப்புவாதக்கட்சி யாழ்ப்பாணத்தில் இருப்பதாகக் கேள்வி. இந்த ஸ்தாபனம் பிழையான வழிகளைப் பின்பற்றுவதையறிந்து அநேகர் "பிச்சைவேண்டாம் தாயே..." என்று சொல்லி ஒவ்வொருவராக மெல்ல மெல்ல நழுவிக் கொண்டுவருகின்றனர்.

இவர்களுக்கு வழிகாட்டியவர் கொழும்புப் புரக்டர் ஸ்ரீ சிவசுப்பிரமணியம் என்ற பிரமுகர். இப்போது ஸ்ரீ க. பாலசிங்கம் என்ற பழுத்த சிங்கமும் செத்துக்கொண்டிருக்கும் தமிழர் காங்கிரஸினின்றும் நழுவிவிட்டது என ஒருவர் அறிவிக்கின்ருர். பேச்சு மூச்சில்லாமல் வேறும் அநேகர் போதுமப்பா போதும் என்று சொல்லி ஓட்டம்பிடிக்கின்றனர்! ஆமாம்; யாழ்ப்பாணத்தவர்களைச் சதா ஏமாற்ற முடியாது.

### இலங்கைக்கு அழைப்பு

புது டில்லியில் அடுத்த வருடம் முற்பகுதியில் ஆசிய நாடுகளின் மகாநாடு ஒன்றை நவயுகத்தின் தியாக புருஷன் ஜவஹர்லால்நேரு ஏற்படுத்துகின்ருர். அநேகமாக மகாநாடு பெப்ரவரி—மார்ச் மாதங்களில் நிகழும். இம்மகாநாட்டிற்கு நேருஜி தாயின் காலடியிற்கிடக்கும் சேயையும் அழைத்திருக்கின்ருர். இலங்கை இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையிற் பயன்படுத்தி அந்நிய ஆட்சியினின்றும் தப்பிக்கொள்வதற்கு முயற்சிக்குமா, என்ன?

ஜப்பானும் ஆசியாவிலுள்ள சோவியத்துக் குடியரசுகளும் இம்மகாநாட்டிற் பங்குபெறும்.

### 'புதுயுகக் குருதேவர்'

பாரத புண்ணிய பூமியிற் புதிய சகாப்தம் உதயமாகியிருப்பதற்குப் பாரதியார் முக்கிய பங்கை உதவியிருக்கின்ருர். இம் மகா கவியின் தினத்தைத் தமிழ்நாடும் ஈழநாடும் பயபக்தியுடனும் குதூகலத்துடனும் கொண்டாடின. வழக்கம்போல ஈழகேசரி பாரதியாரின் ஜயந்தியை ஏற்ற முறையிற் கொண்டாடுமென வாசகர்களுக்குக் குதூகலத்துடன் ஞாபகமூட்டுகின்றேன்.

### ஸ்ரீ வ. ரா. பேசுகின்ருர்

பாரதியாரின் நாமத்தை வாழ்த்தும்போது 'பாரதி ஞாபகச் சின்னம்' சம்பந்தமாக ஸ்ரீ வ. ரா. 'தினசரி'யிற் பின்வருமாறு கூறும் வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன.

பாரதியாரின் உருவச் சிலையைச் சிறந்த முறையில் அமைக்கவேண்டும், என்று சொல்லிவிட்டு ஸ்ரீ வ. ரா. பின்வருமாறு தெரிவிக்கின்ருர்:

"பாரதி மண்டபம் என்ற திவ்ய நாமம் தாங்கிய பேரரங்கமொன்றை அமைக்க வேண்டும். வலிமை குன்றி, நொந்துபோன தமிழ் எழுத்தாளர்களுக்குப் பஞ்சப்படி போன்ற ஒன்றையாவது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்."

நல்ல சமையத்தில் ஸ்ரீ வ. ரா. இந்த யோசனையைக் கூறியிருக்கின்ருர். ஒக்டோபரிலே சென்னையில் நடைபெற விருக்கும் தமிழ் எழுத்தாளர் மகாநாடு இத்துறையில் முயற்சித்து தமிழ் எழுத்தாளரின் பொருளாதார நிலையை ஆராய்ந்து ஆவன செய்யுமென எதிர்பார்க்கலாமல்லவா?

### "என். எஸ். கே." சபை

"நாம் இருவர்" என்ற நாடகத்தை டி. கே. சகோதரர்கள் நடித்தார்களென்று சமீபத்திற் குறிப்பிட்டிருந்தேன். அது தவறு. இந்நாடகத்தை நடித்துப் பெயரும் புகழும் ஈட்டியவர்கள் என். எஸ். கே. நாடக சபையினராவர். சினிமா பத்திரிகையின் துணை ஆசிரியர் எஸ். எம். சந்தானம் பாட்டைசாரியின் குறிப்புகளை எவ்வளவு கவனமாக வாசிக்கின்ருர் என்பதற்கு அவர் எமக்கு அனுப்பிய அட்டை இதழ் சான்ருகும். அவருக்கு எனது நன்றி.

### ஸ்ரீ கல்யாணராமஐயர்

சென்னை தினமணிப் பத்திரிகையின் பிரதிநிதிகளில் ஒருவரான ஸ்ரீ கே. ஆர். கல்யாணராம ஐயர் கடந்த சிலதினங்களாகத் தமது நண்பர் முகமது சுலைமான் அவர்களுடன் இலங்கையில் சுற்றுப்பிரயாணஞ் செய்துவருகின்ருர். கொழும்பு வானெலி நிலையத்துத் தமிழ் அறிவிப்பாளர் ஸ்ரீ சோ. சிவபாதசுந்தரம் போன்றவர்களின் உதவியுடன் இலக்கிய நண்பர்களையும் வேறு பல பிரமுகர்களையும் சந்தித்துப் பேசுகின்ருர். கடந்த வாரம் ஈழகேசரி நிலயத்துக்கு விஜயம்செய்து ஒரு பகலில் கார் மூலம் யாழ்ப்பாணத்தின் முக்கிய இடங்களையும் பார்த்து மகிழ்ந்தார். இம்மாதம் 18-ந் திகதி ஆகாயமார்க்கமாகச் சென்னை திரும்புவார்கள்.

### சக்கார் சங்கம்

கொழும்பில் உள்ள சக்கார் சங்கம் தகுந்த முறையில் காந்தி ஜயந்தியை ஒக்டோபர் முதல் வாரத்திற் கொண்டாட உத்தேசித்துள்ளது. நூல் நூற்கும் போட்டியும் இச்சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட் டிருக்கின்றது. சகல விபரங்களும் அறிய விரும்புவோர் பின்வரும் விலாசத்துக்கு எழுதலாம்:

செயலாளர், சக்கார் சங்கம்
166, குமாரவீதி,
புறக்கோட்டை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இந்தியா

# காங்கிரஸ் சுதந்திர யாத்திரை

## நேருஜி விளக்கம்

அகில உலகத்தின் கவனமும் இன்று இந்தியாமீது படிகின்றது. அடிமை ஆட்சியைத் தகர்த்தெறியும் பணியில் காங்கிரஸ் முற்பட்டிருக்கையில் முஸ்லீம்லீக் கறுப்புக்கொடியேற்றிச் சுதந்திர உலகிற்குக் கரி பூசுகின்றது! அதேசமையத்தில் பிரிட்டன் சொந்த நாட்டு மக்களிடம் இந்தியாவை ஒப்படைத்துவிட்டுத் தப்பிக்கொள்வதற்குத் தயாராகின்றது!!

இந்நிலையில் நாட்டின் பொறுப்பையேற்று உலகத்திலே சமாதானம் நிலவச்செய்யும் பணியிற் சர்வ ஜாக்கிரதையாக உழைக்க முன்வந்துள்ள இந்திய 'ஜனதிபதி' ஜவஹர்லால் நேரு சமீபத்திற் செய்த பிரசங்கம் அநேக விதங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது.

உலகத்தில் அடிமை நாடுகள் விடுதலைபெற்று வாழவேண்டுமெனவும் வகுப்புவாதப் பூசல்கள் அழிந்து ஒழிய வேண்டுமெனவும், சகல வகுப்பினரதும் நம்பிக்கையையும் ஆதரவையும் பெறுவதே இந்திய மக்களின் தலையாய நோக்கங்களெனவும் நேருஜி தமது பிரசங்கத்தில் அழுத்தந்திருத்தமாகக் கூறியிருக்கின்றார்.

இடைக்கால அரசாங்கத்தின் உபதலைவர் என்ற முறையில் ஜவஹர்லால் நேரு செய்திடும் புரட்சிகரமான சொற்பெருக்கு நேருஜியின் அப்பழுக்கற்ற உள்ளத்தையும் தெளிவான அரசியல் ஞானத்தையும் பளிங்குபோல் எடுத்துக்காட்டுகின்றது. அத்துடன் இப்பிரசங்கத்தின் மூலம் இந்தியாவின் கௌரவத்தைக் காப்பாற்றியிருப்பதுடன் முஸ்லீம் மக்கள் காங்கிரஸ் ஆட்சியின் கீழ் சுதந்திரத்துடன் வாழலாமென்பதையும் சந்தேக விபரீதமின்றிக்குறிப்பிட்டிருக்கின்றார்.

இடைக்கால அரசாங்கம், அதிகாரவர்க்கத்தின் ஆட்சியன்று. இது நாட்டுமக்களின் ஆட்சி. இதன் பொறுப்பையேற்றிருக்கும் அத்தனைபேரும் இந்திய மக்களின் ஊழியர்கள். அதிகார பீடத்தில் அமர்ந்து ஏகாதிபத்திய அரசு நடாத்திய இராசப் பிரதிநிதி இனிச் "செத்தேன் சிவனே!" என்று இருக்க வேண்டியதுதான். "இராசப் பிரதிநிதி தன்பாட்டில் முன்வந்து சகல அதிகாரங்களையும் இடைக்கால மந்திரிகளிடம் ஒப்படைத்துள்ளார். பிரித்தானிய மன்னர் இங்கிலாந்திலே மந்திரிகளைக் கலந்து ஆலோசியாது ஒன்றும் செய்வதில்லை. செய்யவும் முடியாது. அதே போன்று, இந்தியாவிலும் இடைக்கால அரசாங்கத்தைக் கலந்துகொள்ளாது இராஜப்பிரதிநிதி ஒன்றுஞ் செய்யமுடியாது". இவ்வாறு காந்திஜி பிரார்த்தனைக் கூட்டத்திற் கூறியிருக்கின்றார்.

ஒரு சுபதினத்தில் இத்தகைய மகத்தான மாறுதல்கள் இந்தியாவில் ஏற்பட்டுக்கொண்டு வருவதை ஜனப் ஜின்னு போன்ற ஒரு சிலரால் உணரமுடியாதபோதிலும் இந்தியாவிற் பெரிய மாறுதல்கள் நிகழ்ந்துவருகின்றன.

பண்டிதநேரு கூறுவதுபோல இந்தியா சுதந்திரநாடு என்ற முறையிலே தனக்குரித்தான சொந்தக் கொள்கையுடன் சர்வதேச மகாநாடுகளில் முழுத்தொடர்பையும் வைத்துக்கொள்ளும் உலக சமாதானத்தையும் சுதந்திரத்தையும் விருத்திபண்ணுவதற்காக ஏனைய நாடுகளுடன் ஒத்துழைப்புடன் நெருங்கிய சம்பந்தத்தையும் இந்தியா வளர்த்துக் கொள்ளுமெனவும், ஒருநாட்டுக்குஎதிராக வேறோர்நாடு பலம்பெறும் நோக்கத்துடன் கோஷ்டிகள் சேர்ப்பதில்சம்பந்தப்படாமல் இயன்றவரைவிலகிக்கொள்ளுமெனவும் நேருஜிதெரிவித்திருக்கின்றார்.

பெரிய திட்டத்தின் ஒரு சிறு அங்கமாகவே இடைக்கால அரசாங்கம் அமைந்திருக்கின்றது. இதனோடு அரசியல் நிர்ணய சபை அமைப்பும் இணைந்துள்ளது. சுதந்திர இந்தியாவுக்கு உகந்த அரசியலை அமைத்துக்கொள்வதற்காக அரசியல் நிர்ணய சபை விரைவிற் கூடவிருக்கின்றது. இது சம்பந்தமாகச் சபையின் பகுதிகள், கோஷ்டிகள் அமைப்பு என்பனபற்றி விவாதங்கள் நடைபெறுகின்றன. சகல விஷயங்களிலும் சமரசமான முடிவு காண்பதே அரசியல் நிர்ணய சபையின் முக்கியநோக்கமாகவிருக்கும்.

நேருஜி கருதுபோல, இந்தியா முன்னேறிக்கொண்டு போகின்றது. பழமையும் கழிந்து செல்லுகின்றது. சம்பவங்களைச் சும்மா பார்த்துக்கொண்டிருப்பவர்களாகவும் ஏனையோரின் ஏவலாட்களாகவுமிருந்த இந்தியா நீண்டகாலம் வரை இருந்துவந்துள்ளது. சுயமாக விஷயங்களைச் செய்து பார்க்கும் சந்தர்ப்பம் இப்போதுதான் இந்தியமக்களுக்குக் கிடைத்திருக்கின்றது. ஆகவே, இந்தியாவின் விருப்பத்தின்படியே இனி அதன் சரித்திரம் அமைக்கப்படும். இத்துறையில் இந்தியா பெருமைகொள்ளும்படி நடந்துகொள்வதற்குச் சகல மக்களின் ஒத்துழைப்பும் தாராளமனப் பான்மையும் அவசியமாகின்றது. கதவு திறப்பட்டுவிட்டது. முடிவான இலட்சியத்தைப்பெறுவதற்கு இந்தியா சகல மக்களையும் அழைக்கின்றது. பாரதியார் கூறுவதுபோல, "தாயின் வயிற்றில் பிறந்தோர் தம்முள் சண்டை செய்தாலும் சகோதரன்றோ?"

ஆகவே முப்பதுகோடியும் வாழ்வோம் என்று முழங்கும் மகாகவியின் வீரவாக்கியத்தைச் சிரமேற்கொண்டு ஜனப் ஜின்னு இந்தியாவின் விடுதலைக்குத் தமதுபங்கையும் உதவ முன்வரவேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் உலகப் பிரசித்தி வாய்ந்த கேலிச் சித்திரக்காரனை லோ அவர்கள் தீட்டியுள்ள அரசியற் சித்திரத்தைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. புது டில்லியில் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் இடைக்கால அரசாங்கப் பொறுப்பை ஏற்றுள்ள தலைவர்கள் மேசையைச் சுற்றியிருக்கின்றனர். ஆனால் அங்குள்ள கதிரை ஒன்று சும்மா காணப்படுகின்றது. அதில் அமர்ந்திருக்க வேண்டியவர் பிணங்களும் கழுகுகளும் நிறைந்த கல்கத்தாவில் நாய்களுக்கு மத்தியில் இருக்கின்றார். அவருக்கருகில் நரியொன்று ஊளையிடுகின்றது. பக்கத்திலே தலை [illegible]

— இ. அ.

## 2-வது தமிழ் எழுத்தாளர் மகாநாடு ஒரு வேண்டுகோள்

இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மகாநாடு இவ்வாண்டு ஒக்டோபர் மாதக் கடைசிப் பகுதியிற் சென்னையிஸ் நடைபெறவிருக்கின்றது. சென்னைநகர் எழுத்தாளர்கள் சங்கம் இதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்கின்றது. இப்பணியில் தமிழ் மக்கள் அனைவரும் பங்குபெற வேண்டிய உரிமை கொண்டவர்கள். மகாநாட்டு சம்பந்தமாக 2-வது எழுத்தாளர் மகாநாட்டு வரவேற்பு நிர்வாக சபையினர் பின்வரும் வேண்டுகோளை விடுத்திருக்கின்றனர்:

இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மகாநாட்டை ஒக்டோபர் மாதம் 26, 27-ந் திகதிகளில் நடத்துவதாகச் சென்னை நகர தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் தீர்மானித்திருக்கின்றனர்.

மகாநாட்டில் பத்திரிகை, புத்தகக் கண்காட்சி நடத்தவும், இன்னும் தமிழ்மொழி, தமிழ் எழுத்தாளர் வளர்ச்சிக்கான ஏற்பாடுகள் செய்யவும் தீர்மானித்திருக்கின்றனர்.

மகாநாட்டை எவ்விதத்திலும் சிறப்பாக நடத்துவதற்கு தற்கால நிலைமையில் பொருள் செலவு ஏற்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. மேலும் எழுத்தாளர் சங்கம் நிரந்தரமாகச் சேவை செய்வதற்கு நிதி ஒன்றும் வேண்டும். இக் காரியங்கள் நிறைவேறுவதற்காகத் தமிழ் ஆசிரியர்களும், தமிழ் அபிமானிகளும் தாராளமாகப் பண உதவிசெய்யுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

நன்கொடை அளிப்பவர்கள் தொகையை, காரியதரிசிகள், 2-வது தமிழ் எழுத்தாளர் மகாநாடு, "பாசரசு காரியாலயம்" 45—46 அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# ஒப்புரவின் எல்லை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கச் சிகரமாக்கி, அவர் செத்ததும் படத் திறப்பு, சிலைநாட்டு வரையில் சென்றுவிடும். ஒன்றுந் தெரியாதவன் ஓயாமல் வாழ்நாள் முழுதும் உழைத்துக் கொண்டிருப்பான். அடக்கமாக அவன் செய்த தொண்டில் ஆரவாரமோ, பிறர்புகழ்ச்சியோ ஒன்றுமிராது. அவன் உண்மைத் தொண்டனாகவிருக்கலாம். ஆனால் தகுதியற்றவரை, ஏதோ பலரைவிடச் சில படித்துப் பட்டம் பெற்று மனப்பாடம் செய்துவிட்டான் என்பதற்காக, அவனைத் தூக்கி இப்படியெல்லாம் ஏத்தினால், இருப்பவனும் உணர்ச்சி கொண்டு அத்தகைய புகழை நாடி, தொண்டை மறந்து, புகழ் கிடைக்காமல் ஏங்கி முடிவில் தன்னலவாதியாகி விடுகிறான். இவ்வளவுக்கும் உண்மைத் தொண்டரிடையே ஒளிந்து வேலை செய்யும் சில தன்னலவாதிகளே இவற்றிற்கெல்லாம் காரணம்.

'வீழ்நாட் படாஅமை நன்றாற்றின்' என்ற குறள் எண்ணிப்பாருங்கள். பணிசெய்யாத மணிகள் கழியக்கூடாது. ஒவ்வோர் நாழியும் இழந்து போகாமல் நாட்டிற் குழையுங்கள் என்றல்லவா ஓதுகின்றது? அதைவிட்டு ஓய்ந்த நேரத்தில் உப்புப் புளிக்காகும் என ஓடிவருவோனை யெல்லாம் 'தியாகத்தின்' சிகரமாக்கினால் உலகில் 'தியாகம்' என்பதற்குத் தன்னலம் என்ற பொருளைத் தவிர வேறுண்மை கிடைக்காது! உலகில், அரசியல் மிதவாதக் கட்சியினரை யெல்லாம் ஆராய்ந்தால் இந்தப் பெரியோர் மந்தை மந்தையாக விருப்பதைக் காணலாம். 'அயர்விலர், அன்ன மாட்சி அனையராகித் தனக்கென முயலா நோன்றாள், பிறர்க்கென முயலுநர் உண்மையானே' என ஓர் தமிழ் அரசன் இயம்புகிறான். 'அயர்விலர்' என அவன் கூறியதைக் கருதினால்,' கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி' என்ற அத்தமிழன் வாழ்வில் எத்தனை நாளில் தன்னலத்திற்காகக் கழிந்திருக்கும் என அறியலாமன்றோ?

பலர் நேரத்தையெல்லாம் நாட்டிற்கே செலவிடுவர். ஆனால் தமது மனித அறிவை மட்டும் மறந்து தன்னலத்திற்கே, தம் நலத்திற்கே அவ்வறிவைப் பயன்படுத்துவர். அவரால் நாட்டிற்கு அளவிலா நலன்கள் ஏற்பட்டிருக்கலாம்; இல்லையென்னவில்லை. ஆனால் அறிவும் அதில் பதிந்தால்தான் அறிவுடைய உலகைப் பயன் பெறச் செய்யமுடியும். இல்லையேல் தொண்டு 'போர்வை' யாய் விடும். ஐரோப்பிய நாடுகளுந்தான் இன்று பெரிய விஞ்ஞான அறிவு படைத்ததாய்க் கருதப்படுகின்றன. அது உலகிற்குத் தொண்டு செய்வதாய்க் கூற முடியுமா? பொழுதையெல்லாம் பிறநாட்டைச் சுரண்டுவதெப்படியென்றே தனது அறிவைத் துணைகொண்டு துருவித் துருவி ஆய்ந்து வந்தால்தான் இன்று அறிவிருந்தும் அதனை மதிப்பாரில்லை. ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பாண்டியன் பேரறிவாளி; பிள்ளைப்பேறு எவ்வளவு உலகில் உயர்ந்தது; அரிது எனப் பாடலெல்லாம் பாடும் புலமை யறிவு பொருந்தியவன். அவனே அறியாமல், ஊழ்வலியாலோ? கோவலனைச் கொன்றான். தன் அறிவு அத்துடன் நாட்டின் நலனில் உலைவைத்து விட்டதாக உணர்ந்தான். ஒப்புரவின் உயர்வில் நின்ற அவன் உடனே இவ்வுலகினை விட்டு ஓடிவிட்டான். என்று எனது அறிவு மக்கட்போக்குக்கு இன்னலையெண்ணியதோ, அன்றே யான் இங்கு வாழ்ந்துப் பயனில்லை யெனக் கருதிய அவனன்றோ ஒப்புரவின் முடியாக விளங்கத்தக்கவன்? வீரமென்று பேசப்படுவோருட் பலர் பேரறிவாளிகளாகவிருக்கலாம். ஆனால் தனிவாழ்விலோ, பொது வாழ்விலோ பண்பு குறைந்தவராக; ஒழுக்கங் குன்றியவராக விருக்கலாம். கைக்கூலி (லஞ்சம்), காமப் பித்து, தற்புகழ்ச்சி, நடுநிலை மீறல் (பக்ஷபாதம்), வாணிகத்தில் மிக்கலாபம் இவை இன்று அறிவாளிகளால் தொண்டர் (தேசபக்தர்) பலருள் மறைந்து கிடக்கின்றன. ஒரு மனிதனின் தனிவாழ்விலும் சிறு செயலிலும் நேர்மையாய் நடப்பதன் வழியேதான் அவன் நாட்டைப் பண்படுத்த முடியும். அவ்வொழுக்கமே உயிர் எனத் தமிழ் போற்றுகின்றது.

'பகையுள்ளும் பண்புள பாடறிவார் மாட்டு' என்ற குறள் என்ன மொழிகின்றது? பகைவனிடமும் தன் பண்பு கெடாமல் நடக்க வேண்டும். அப்படிப்பட்டவன் தன் வாழ்வில் மறைவாக எப்படி மாண்பை மீறுவான்? 'ஒதியுணர்தலும் பிறர்க்குரைத்தலும்' உயர்ந்த அறிவே. ஆனால் அதற்குத் தக, தான் அடங்குதலே பண்பு. அங்ஙனம் நடவாதவன் பெரும் பேதையெனப் பொதுமறை பேசுகின்றது. அப்பேதை நாட்டிற்கு என்ன செய்யமுடியும்? பேரறிவாளிகள் பலர் தமது நாகரீகம், பண்பு யாது என்றறியாமலே 'அறிவாளிகளாய்' வாழ்த்தப்படுகின்றனர். தமது நாகரீகத்தை மறந்தோ; மறைத்தோ; மடித்தோ பிற நாகரீகத்தைப் பற்றும் இவர்கள் ஒப்புரவால் நாடு உண்மைப் பண்பை உணரமுடியுமா? பிற நாகரீகத்தின் அடிமைகள் என்றுந் தன்னலவாதிகளே.

ஒரு வள்ளல் 'பசிப்பிணி மருத்துவன்' என்றே அழைக்கப்படுகிறான். அவன் பண்பிற் சிறந்த பணியாளன். ஆகையினாற்றான் அவனுக்குப் பசிநீக்குதலாய 'பண்பே' பெயராக வளங்கப்பட்டது.

கடைசியாக உள்ளது உயிர். ஒப்புரவிற்காக நாமே உயிரை விட்டு விடல் கோழைத்தனம். விடவேண்டி நேருமாயின் 'அஞ்சாமல்' நிற்பதே ஒப்புரவு. தனது செல்வம், நேரம், அறிவு, பண்பு யாவற்றையும் பணியாக்கும் ஒருவனும் 'உயிரை' வெல்லமாகக் கருதுகிறான். அஃதியல்பு. ஆனால் அதனில் வெல்பவனே உண்மை வீரன்; வழிகாட்டி; குறிக்கோள். ஆவி போனாலும்பெட்டிச் சாவி மட்டும் போகாமல் காப்போர் பல வீரர் உண்டு. அவர் உயிருக்கஞ்சார்; அது பணவெறி; அவரைப் பற்றி இங்கு பேச்சில்லை. ஆனால், மிகுந்த சுமையைத் தாங்கினால் வளையாமல் முறியும். கற்றூணைப்போல, வாழ்வில் ஒப்புரவிற்கென இறக்க நேரிடின் அதனைப் புன்னகையுடன் வரவேற்போர் ஓர் குமணன்; ஓர் சோக்ரடீஸாகத்தான் இருக்கமுடியும்.

அப்படி வீரத்துடன் அவன் சாவினை வரவேற்றால் அவன் செத்தவனல்ல; வாழ்ந்தவன் அவனே. நம்மால் அப்படிச்செய்தல் இயலாதாகலாம். ஆனால் குறிக்கோளாகப் பற்றத்தக்க வரலாற்றினை அவன் எழுதிச் சென்றான் என்பதில் என்ன ஐயம்! எல்லோராலும் எளிதில் முடிவதொன்றைச் செய்வது புகழா? அதனால் அவனை 'உயர்ந்தவனாகத்தான்' எப்படி மதிக்க முடியும்? 'இழைத்த திகவாமைச் சாவாரேயாரே பிழைத்த தொருக்கிற் பவர்' என்பதில் என்ன கூறுகிறது? 'வாழ்வில் இந்நாட்டை உயர்த்தவே தொண்டுசெய்வேன்' என இறங்கிவிட்டோம். இடையில் இறந்துவிட்டோம். தோல்வியா? அல்ல! வெற்றி! வெற்றி!! ஏன்? உண்மையாக எண்ணினோமே! பேசினோமே! செயலுக்கு முந்தினோமே, அதுவேவாழ்க்கை. தொண்டனைப் பேர்பெற்று, ஆனால் செயலில் ஆயிரங் கொடுமைகளைச் செய்வதினும், அடக்கமாக நாட்டிற் காவதை எண்ணி எண்ணி ஓர் நாழிகை இருப்பவனே உண்மையில் ஒப்புரவாளன்.

முற்கூறிய செல்வம், நேரம், அறிவு, பண்பு, உயிர் இவற்றைக் கொண்டு பணிசெய்வதில் ஒருவரிலும் ஒருவர் உயர்ந்தவரே; நல்லரே. அவர் உள்ளம் பிறரையே உன்னுமானால் அவர் கடைசி நிலையினை அடைந்தே தீருவர். ஆனால் கடைசிநிலையிலுள்ளவரும் தன்னல நஞ்சு கலந்த உள்ளம் பெற்றாரானால் உடனே கீழே படிப்படியாக இறங்கி விடுவார். முதலில் செல்வத்திற்றான் தொடங்கவேண்டும். அதனாலேயே கொடையின் வழித் தமிழில் 'ஒப்புரவு' உணர்த்தப்படுகிறது. 'உயிரில்' கொண்டு முடிக்கப்படுகிறது.

ஆகவே ஒப்புரவின் முடிந்த எல்லை (தியாகத்தின் சிகரம்) உயிர். அதாவது வாழ்வு முழுவதுமே 'ஒப்புர' வாதல்வேண்டும் என்பதே அதன் கருத்தும். செல்வம், நேரம், அறிவு, பண்பு இவையெல்லாம் அதனில் ஈடுபட வேண்டுமெனில், இவற்றிற்கப் பால் வாழ்வென்பதொன்றேது?

மனித வாழ்வின் அறிவே; குறிக்கோளே ஒப்புரவு. எண்ணம்; சொல்! செயல் யாவும் ஒப்புரவு. இப்படி வாழ்பவன் 'வாழத்தான் முடியுமா?' களவாக வல்லவோ இருக்கிறதென்பர் சிலர். வாழலாம்; வாழ்ந்துள்ளனர். அதுவும், நம்மிலும் நானூறு மடங்கு மேலாக; அமைதியுடன்; இன்பத்துடன்.

'அல்லல் அருளாள்வார்க்கில்லை,' பாருங்கள் இந்த அறிவுலகமே சான்று!


# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்

கோப்பாய்த் தொகுதி

சைவ வித்தியா விருத்திச் சங்கக் [இந்து போட்]

காரியதரிசியும், அப்புக்காத்துமாகிய

கோப்பாய்

**திரு. சுப்பிரமணியம் இராசரத்தினம்**

அவர்கள்

புதிய அரசியல் திருத்தப்படி நிறுவப்படும்

இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவர் பதவிக்கு

ஓர் அபேட்சகராக முன்வந்திருக்கிருர்கள்.

பிரிவு: கீழ்க் காட்டப்படும் கிராம சங்கப் பகுதிகள்:

(1) அச்சுவேலி. (2) புத்தூர். (3) உரும்பராய், ஊரெழு, நீர்வேலி. (4) கோப்பாய். (5) நல்லூர் (கல்வியங்காடு, திருநெல்வேலி, வண்-வடமேற்கு). (6) கொக்குவில், கோண்டாவில்.

14-7-46


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய அன்பர்களுக்கு—XIV :: :: 'சுயா'

# நிலாவரைக்கிணறு

**வாரக்கணக்காக** உங்களுக்குக் கட்டுரைகள் எழுதாமல் விட்டு விட்டபடியினாலே உங்களுக்கு எழுதவேண்டிய சங்கதிகள் தலைக்குமேற் குவிந்துபோய்க் கிடக்கின்றன. இந்தவாரம் புத்தூரைச் சேர்ந்த நவற்கிரி என்னுங் கிராமத்திலுள்ள நிலாவரை என்னும் வற்றா நீரூற்றைப்பற்றிக் கூறப் போகின்றேன்.

இராமர் இராவணனைப் புறங்கண்டுவிட்டுத் தன் வானரப்படைகளோடு வரும்போது அவை தண்ணீர்த் தாகத்தாற் தவித்தபோது அவர் தன் கோதண்டமென்னும் மகாப்பெரிய வில்லினின்றும் ஒரு பாணத்தைப் பூமியை நோக்கிவிட, இந் நீரூற்றுப் பொத்துக் கொண்டு வந்ததென்றும் அதில் வானரப்படைகள் நீரருந்திக் களைப்பாறின வென்றும், இக் கிணறுவந்த வரலாற்றைப்பற்றி யாழ்ப்பாண மக்கள் ஒரு கதையளந்து கொண்டு வருகின்றனர். இன்னுஞ் சிலர் அது தவறு, இடியேற்றினாற்றான் இக் கிணறு உண்டாயது என்று சொல்லுகின்றனர். ஆனால் இக் கிணறு உண்டாய உண்மைவரலாற்றைக் கண்டு பிடிப்பதற்கேற்ற சரித்திரச் சான்றுகளோ, கர்ணபரம்பரைக் கதைகளோ இன்னுஞ் சரியாக அகப்படவில்லை யென்பது மாத்திரமுண்மை. இதன் வரலாறு எப்படியாவது போய்த் தொலையட்டும், இதற்குப் புதிதாகவந்த பவிசைப் பற்றித்தான் நான் எழுதுகின்றேன்.

இந்தக் கிணற்றை உங்களில் அநேகர் கண்டிராவிட்டாலும் கேள்வியளவிலாவது அறிந்திருப்பீர்களல்லவா? இந்தப் பிரசித்திபெற்ற கிணறு இதுவரையும் தனக்கு நல்லபெயரை ஆக்கிக் கொண்டிருக்கவில்லை. பிணங்கிக் கொண்ட தம்பதிகளுக்கும், கடன் தொல்லைகளில் அகப்பட்டுத் தவித்தவர்களுக்கும், மாமன் மாமியரோடு சண்டை போட்டுக்கொண்ட மருமக்களுக்கும், மருமக்களோடு வெறுப்புக்கொண்ட மாமன் மாமிமார்க்கும், தகப்பனை வெறுத்த பிள்ளைக்கும், பிள்ளையை வெறுத்த பெற்றாருக்கும் இக்கிணறு இதுவரையிலும் எவ்வித வஞ்சகமோ, துரோகமோ செய்துவிடாது புகலிடம் கொடுத்துதவி வந்திருக்கிறது. எத்தனையோ வண்டில்கள், பைசிக்கிள் வண்டிகள், தட்டுமுட்டுச் சாமான்கள் இத்தியாதி பொருள்களெல்லாம் இதன் அடித்தளத்தைத் தேடிச் சென்றிருக்கின்றன. பதினாயிரக்கணக்கான மனுஷரை இது தன்னகத்தே வாங்கியிருக்கின்றது. மலைபோற் குவிக்கத்தக்க பொருள்களை இது விழுங்கி ஏப்பம் விட்டிருக்கின்றது. யுகக்கணக்காகப் பெய்து கொண்டு வரும் மழை நீரையும் வாங்கிக் கொள்ளுகின்றது. என்றாலும் தன்னிலையிற் கொஞ்சமாவது தடுமாறவேண்டுமே! அதுதான் கிடையாது. பிறந்தபோது எப்படி அது இருந்ததோ இன்றும் அப்படித்தானிருக்கின்றது. 'மிலிற்றறி' காலத்தில், கள்ளப்பெற்றோல், கள்ளச் சிமென்ற் முதலியவைகளை விற்றுக் கொஞ்சம் கையிற் பிடித்துக்கொண்டு தலைகால் தெரியாமல் துள்ளிக்குதிக்கும் கடைக்காரரும் மற்றவர்களும் அந்தக் கிணற்றின் கலங்கா நிலையைக் கண்டுங் கண்டுங்கூட இன்றும் திருந்தாமலிருக்கின்றார்களே என்று நான் ஆச்சரியப் படுகின்றேன்.

**வாழ்க்கையில்** வெறுப்புக் கொண்டவர்களெல்லாம் "கடைசி நிலாவரையாவது எங்களுக்குப் புகலிடங் கொடுக்க விருக்கின்றது தானே" என நம்பிக்கையோடிருந்து கொண்டிருப்பது சிலருக்குப் பிடியாமற் போய்விட்டதோ என்னவோ தெரியாது, இந்தக் கிணற்றில் யந்திரங்களைக் கொண்டுவந்து போட்டு நீரிறைக்கத்தொடங்கிவிட்டார்கள். இறைக்கும் நீரை வாய்க்கால் வழியாகச் சிறுப்பிட்டி என்னுங் கிராமத்துக்கு அனுப்பி அங்கே கமச் செய்கைக்கு உபயோகப் படுத்துகின்றார்கள். இதிலும் விசேஷமென்னவென்றால், சொந்தக் கிராமமாகிய நவற்கிரி வானத்தைப்பார்த்து பெருமூச்சு விட, தூரக்கிராமமாகிய சிறுப்பிட்டி இக்கிணற்றால் சுகமனுபவித்துக் கொண்டிருப்பதுதான்.

நிலாவரையை இறைத்துக் கமச் செய்கைக்கு உபயோகப் படுத்தத் தொடங்கி விட்டார்களென்று நீங்கள் பத்திரிகைகளிற் படித்ததுமே, யாழ்ப்பாணம் முழுவதும் இக் கிணற்று நீரினால் கமச்செய்கை நடைபெறத் தொடங்கிவிட்டது என்று எண்ணியிருப்பீர்களோ என்னவோ தெரியாது. சிறுப்பிட்டி என்ற ஒரு கிராமத்துக்குத்தவிர, இக் கிணற்றின் அண்டைக் கிராமங்களாகிய புத்தூர், அச்சுவேலி, ஈவினை, புன்னாலைக்கட்டுவன் என்ற மற்றக்கிராமங்கள்கூட இந் நீரிறைப்பினால் உபயோகமடையவில்லை யென்றால் அப்புறம் இந் நீரிறைப்பின் மகத்துவத்தைப் பார்த்துக்கொள்ளுங்களேன். நிலைபரம் இப்படியிருக்க, ஸ்ரீ சேனநாயக்கா அவர்கள் யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் சிங்களப் பிரபுக்களாகிய தாங்கள் யாழ்ப்பாண மக்களுக்கு ஏதோ பெரும் நன்மையைச் செய்து விட்டவர்களைப் போலப் பெருமையடித்துக் கொள்வதையும், அவரைச்சிலர் சிரசிற் தூக்கிவைத்துப் பேசுவதையும், பார்க்கப் பார்க்க எனக்குச் சிரிப்பு வருகின்றது. "இன்னும் யாழ்ப்பாணத்தில் எங்கெங்கெல்லாம் வற்றா நீரூற்றுக்ளிருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் வெளிக்குக் கொண்டுவந்து விட்டுத்தான் நான் மறுகாரியம் பார்ப்பேன்" என்றும் அவர் சொல்லிப் போயிருக்கின்றார். இதைக்கேட்டதும் அவரின் தேசீயகட்சிக்கு ஆதரவு தேடுபவர்களுக்கு உச்சி குளிராதா என்ன!

இந் நீரூற்றை இறைப்பதைக் கூடத் தடைசெய்யச் சிலர் முயற்சி செய்ததாகவும் நான் அறிகின்றேன். இம் முயற்சியால் யாழ்ப்பாணம் முழுவதும் சுபீட்சமடையாவிட்டாலும், சிறுப்பிட்டி என்ற ஒரு கிராமமாவது வாழட்டுமே. நமக்குவந்த கேடென்ன? "புத்தூர் சிறுப்பிட்டி பூம்பிட்டியாவாய்" நவற்கிரி இதால் நன்மையடையா விட்டாலும், ஆடு மாடுகள் கூட மேய்வதற்கு உதவாத, கல்லுமண்டிப்போய்க் கிடக்கும் கட்டாந் தரைகளெல்லாம் இங்கே நல்லவிலை போகின்றன. ஐக்கிய சங்கப்பகுதியில் ஏதோ பெரிய உத்தியோகம் பார்க்கும் ஒருவர் இக் கிணற்றின் அண்மையில் பல ஏக்கர் கணக்கில் கட்டாந்தரையை விலைக்கு வாங்கியிருக்கின்றாரென்றும் நவற்கிரிக் கிராமவாசிகள் சொல்லுகின்றனர். நவற்கிரிக் கிராமத்துச் சிறுவர்கள், இந்நீர் இறைக்கப்பட்டு வாய்க்கால் வழியாகப் போகும்போது தவளைகள்போல வாய்க்காலிற் கிடந்து மிதப்பதும் பார்வைக்கு அழகாகத்தானிருக்கின்றது. நிலாவரையே! உன்னை நம்பியிருந்த அகதிகளுக்கு நீ என்ன சொல்லுகின்றாய்?







**WANTED**

Immediately a Tamil 1st class trained teacher of either Sex with at least S. S. C. (English) qualification. A Bala-Pundit Preferred. Apply to:

The Principal
Skantha Varodaya College
Chunnakam

13-9-46

[2899]



**அடைவு நகை**
**ஏலவிற்பனவு விளம்பரம்**

தலவாக்கொல்லைக் கடை வீதி 14-ம் நம். புளொக் 2-ம் நம். கடையில் உத்தரவு பெற்று அடகு பிடிக்கும் திரு. மா. உ. க. கந்தையா அவர்களிடம் 15-3-41 தொடக்கம் 31-8-45 முடிய அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் யாவும் 28-9-46 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி கடையில் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

A. V. NADARAJAH
*Licensed Auctioneer*

Hatton
30-8-46
[2890-ii]


# தமிழ்மக்களின் எதிர்காலம்

1. புதிய அரசியல் திட்டத்தின்படி இலங்கையின் உள்நாட்டுப் பரிபாலனம் சம்பந்தமாக எல்லாவகையிலும் இலங்கையின் ஆட்சி சனங்களுடைய கைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

2. தமிழராகிய நாம் எங்கள் எதிர்கால நன்மையையிட்டு, பிரித்தானிய அரசாங்கத்தினிடமிருந்தோ அல்லது இலங்கையிலுள்ள அவர்களுடைய பிரதிநிதிகளிடமிருந்தோ எவ்வித உதவியையும் எதிர்பார்க்க முடியாதென்பதை உணரவேண்டும்.

3. இலங்கைத் தமிழர் 2000 ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வருகிறார்கள். ஆகையால் நாம் ஏனைய சாதியாரோடு சமாதானமாகவும் நேசமாகவும் வாழவேண்டும்.

4. சனங்களின் பொருளாதார நிலையைப் பெருக்கவும், விவசாயம், மீன் பிடித்தல், கைத்தொழில் முதலியவைகளை விருத்திசெய்யவும், கற்றவர்களிடையோ அல்லது கல்லாதவர்களிடையோ தொழிலின்மையை ஒழிக்கவும் தமிழராகிய நாம் முயற்சிக்கவேண்டும். இலங்கைவாழ் தமிழர் ஒவ்வொருவரையும் திருப்தியுற்ற சந்தோஷமான நிலையில் வைத்திருப்பதே எமது நோக்கமாயிருக்கவேண்டும்.

5. பாராளுமன்றத்தில் ஸ்தானங்களையும், மந்திரிசபையிற் பதவிகளையுங் கைப்பற்றுவது மாத்திரம் இலட்சியங்களாகா. மேலே கூறிய நோக்கங்களைப் பூர்த்தி செய்வதே இலட்சியங்களாகும்.

6. புதிய அரசியல் திட்டத்திற் பாராளுமன்ற அங்கத்துவத்தையும், அதனால் தமிழருக்கு ஏற்படும் குறைந்த அரசியற் பலத்தையுங் கூடியளவுக்கு உபயோகித்து மேற்படி நோக்கங்களை நிறைவேற்றவேண்டும்.

7. மேற்படி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குச் சிறந்த வழி, சிங்களச் சாதியாரோடும், ஏனைய சாதியாரோடும் ஒத்துழைப்பதே. தமிழர் தாம் நடந்துகொள்ளும் முறையினாலேயே சிங்களவருடைய நன்மதிப்பையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டும்.

8. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸினாற் பறைசாற்றப்படும் தமிழருக்குள்ள ஒற்றுமை சிங்களவரைப் பகைவர்களாக்குவதுமல்லாமல், தமிழருக்கு விரோதமாக அவர்களை ஒற்றுமைப்படுத்தும். இது எங்களுடைய சென்றகால அனுபவமாகும்.

9. தமிழ்க் காங்கிரஸின் நடவடிக்கைகள், சிங்களவரைப் பகைவர்களாக்குவதுமன்றி, வரும் பாராளுமன்றத்திற்குத் தமிழ்க் காங்கிரஸின் பிரதிநிதிகள் அங்கத்தவர்களாகச் சென்றால், அவர்களுக்குச் சிங்களவருடைய ஒத்துழைப்புக் கிடைக்க முடியாமலுஞ் செய்துவிடும். தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் சிங்களவரோடு ஒத்துழைக்க முயன்றாலும் அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறமுடியாது.

10. சிங்களத் தலைவர்கள் தமிழ்க் காங்கிரஸுடன் இப்பொழுது நடந்துகொள்ளும் முறையைக்கொண்டு, அவர்கள் காங்கிரஸின் பாராளுமன்ற அங்கத்தவர்களோடு ஒருபோதும் ஒத்துழைக்கமாட்டார்கள் என்று தமிழர் யாவரையும் எச்சரிக்கவேண்டியது எமதுகடனாகும். அவர்கள் தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகளின்றியே அரசியலை நடாத்துவார்கள்.

11. ஆகையால், தமிழ்க் காங்கிரஸ் சார்பாகப் பிரதிநிதிகளை அனுப்புவது, எமது கழுத்தில் நாமே கயிறு போட்டுத் தற்கொலை செய்துகொள்வதற்கு ஒப்பாகும். மேலும் தமிழ் நாட்டையும், தமிழர் நிலையையுஞ் சீர்படுத்த முடியாதாகும்.

12. சாதி என்ற முறையிற் பாராளுமன்றத் தேர்தலிற் போட்டியிடுவதும், சிங்களத் தலைவர்களை ஏசுவதும், சிங்களவரைத் தமிழரின் பகைவர்களாக்குவதுமன்றிச் சிங்கள நாடுகளில் தொழிலாற்றும் தமிழருடைய நிலைமையை அபாயகரமாக்குவதுமாகும்.

13. ஆகையால், தமிழ்மக்களாற் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்படும் பிரதிநிதிகள், சிங்கள அங்கத்தவர்களோடு ஒத்துழைப்பவர்களாயும், தமிழருடைய தேவைகளை எடுத்துக் கூறுபவர்களாயும், தமிழருடைய முன்னேற்றத்துக்கு முயற்சிப்பவர்களாயும் இருத்தல் வேண்டும்.

14. சாதித் துவேஷத்தைத் தூண்டும் பேச்சுக்களையும், உறுதிமொழிகளையும் நம்பாது, தமிழரின் எதிர்கால நலனை யோசித்து அதற்கேற்றபடி நடந்துகொள்ள வேண்டுமெனத் தமிழர் யாவரையுங் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

S. சுப்பிரமணியம் (டக்றர்)
C. பொன்னம்பலம்
S. R. கனகநாயகம்

யாழ்ப்பாணம்
12-9-46


**272-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்**

(லைசன்ஸ் இல. 7147/T 39) ஐ உடைய, திருகோணமலை சீனக்குடா, பெரிய கிண்ணியாவில் உள்ள கே. ஜமால்தீன் பெயருக்கு எழுதப்பட்ட 70 புள்ளிகள் பெறுமதியான A 006600 இலக்கக் கூப்பனுக்கு இணையான சாதனம் 3 6-46 இல் தவறி, யாரிடமோ ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

2. இக் கூப்பனுக்கிணையான சாதனத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாமென வியாபாரிகள் எச்சரிக்கைப் படுகின்றனர். இதை யாராவது கொண்டுவந்து கொடுத்தால் அவரை உடனே பொலிசாரிடம் ஒப்படைத்து உடனே எமக்கு அறிவிக்கவும்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 6-9 46


இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கைச் சித்திரம்

# நினையாதது

சா. இ. கமலநாதன்

இதை எழுதுகின்ற இந்த நேரத்தில், நான் வயோதிபனுயிருக்கிறேன். என் வாலிபம் எப்போதோ கலைந்து விட்டது. இது என் வாழ்கையின் அஸ்தமன காலம்.

'காதல்!' சீ! வேண்டாம். இச்சொல் என் காதிற்கு நாராசம் போன்றிருக்கிறது. என் வாழ்வைப் பாழாக்கிய அந்தக் 'காதலை' நினைக்கும்போது இப்போதும் எனது உடல் நடுங்குகிறது.

* * *

மாலை நேரம். சூரியனின் கடைசிக் கதிரை இருள் மறைத்தது. தெருவோர வெளிச்சங்கள் ஒன்றன்பின் ஒன்ருகப் பிரகாசித்தன. என் மனம் எதையோ குறித்து ஏங்கிக்கொண்டிருந்தது. அந்த ஏக்கத்தில் என்றுமில்லாத ஓர் இனிமை தொனித்தது. எதையோ எதிர்பார்ப்பவன்போலவும், ஆச்சரியப்படுபவன் போலவும் இருந்தேன். மலரைச்சுற்றி வட்டமிடும் வண்டுபோல, என் மனம் அவளைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது. ஆகாயக் கோட்டைகளும், பகற் கனவுகளும் என்னை வதைசெய்தன. "அன்றலர்ந்த ரோசா மலர்" என்று சொல்லுகிருர்களே, அது அவள் முகத்துக்கு ஈடாகுமா? என்று என் மனம் என்னையே கேட்டுக்கொண்டது.

அன்று அவள் தலைநிமிர்ந்து என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். என் முகத்தை எவ்வளவு ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அவள் முகம் மலர்ந்து சிரித்தது. வெண் பற்கள் மின்னின. அன்றே அவள் உருவம் என் உள்ளத்திற் பொறிக்கப்பட்டு விட்டது. இருட்டுக்கட்டியபடியால் வீட்டுக்குத் திரும்பினேன்.

* * *

என் படிப்புமேசையி லிருந்த 'லாந்தர்' என்றுமில்லாதவாறு, கண்களை மூடி விழித்தது; இது கூடவா என்னை இப்படிப் பயமுறுத்தவேண்டும்? என்று கேட் கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தேன். எங்கும் அமைதி. "அம்மா அம்மா" என்று பல தடவை கூப்பிட்டேன். பதில் கிடைக்கவில்லை. வேலைக்கார மாரிமுத்துவிடம் 'அம்மாவும் அப்பாவும் எங்கே?' என்று கேட்டேன். "அவர்கள் மாமா வீட்டிற்குப் போய்விட்டார்கள்" என்று கூறினுள்.

நான் மேசையில் அமர்ந்தேன். ருஷிய எழுத்தாளரான விலாட்மீர் எழுதிய பள்ளிக்கூடக் காதல் என்னும் நாவலில், கதாநாயகன் போடும் சபதம் என் உள்ளத்தைத் தட்டி எழுப்பியது.

"பூதகணங்கள் என்னை வெருட்டினுலும், அரச அதிகாரம் என்னைத் தடுத்தாலும், அத்லாந்திச் சமூத்திரத்துக்குள் உன்னை ஒழித்தாலும், உன்னைப் பின் தொடர்வேன். வாழைக்குருத்துப்போன்ற உன் தொடைகளைத் தட்டி, அதன் சப்தத்தைக்கேட்டு இன்புருமல் மரியேன்" இவ் வார்த்தைகளை மீண்டும் மீண்டும் படித்துக் கொண்டிருந்தேன். சற்று நேரத்தால் மாமா வீட்டிற்குச்சென்ற அப்பாவும் அம்மாவும் திரும்பி வந்தார்கள். அவர்களுடைய கையில் என் சாதக மிருந்தது. அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். என்றுமில்லாத சந்தோஷம் தாண்டவமாடியது. அப்பா அம்மாவுடன் ஏதோ குசுகுசுத்தார். 'தம்பி! உனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது'' என்ருள் அம்மா. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "உன்னுடைய மாமா உன்னுடன் மிகவும் பிரியமாயிருக்கிருர். உன்னை லண்டனுக்கு அனுப்பிப் படிப்பிக்கப் போகிருராம்'' என்ருர் தந்தை.

"ஆனல் ஒன்று...'.

என்ன?

'நீ சந்திராவை விவாகம் செய்யவேண்டும்."

எதிர்பாராத இந்த வேண்டுகோள், என்னை நடுநடுங்கச் செய்தது. எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. நானும் அவளும் ஒன்ருகத்தான் படித்தோம் ஆனல் அவள் என் நண்பன் ராஜேந்திராவைக், காதலித்திருந்தாள். அவன் அவனுக்கு எழுதிய காதற் கடிதங்களைக் கூட என்னிடம் காட்டியிருக்கிருன். அவர்களது ஒப்பற்ற காதலுக்கு நான் ஓர் இடறுகட்டையாக இருக்க, விரும்பவில்லை. அதுதான் ஒருபுறமிருந்தாலும் என்மனதைக் கொள்ளை கொண்ட, கமலாவதியைத்தவிர எவரையும் கண்நிமிர்ந்து பாரேன், எனச் சபதம் பூண்ட யான் இதற்கு எப்படி உடன்படமுடியும்?

ஒருமாதிரிச் சமாளித்துக் கொண்டு கதையை ஆரம்பித்ததேன்; சந்திராவை, ராஜேந்திரா காதலிக்கிருனும்.

"ராஜேந்திராவா? என்ன அந்தப்பயலுக்கா உன் மாமா பெண்கொடுக்கப் போகிருர்?" என்ருள் அம்மா.

அவர் கொடுக்காவிட்டாலும் அவள், அவனைக் காதலிப்பது உண்மை.

"அந்தப்பயலை நாளைக்கே துரத்துகிறேன் பார். உன் மாமாவின் மகள் உனக்கே சொந்தம்" என்று பல்லை நெருமினுர் தந்தை.

ஏதோ பார்க்கலாம் என்று சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் சென்றேன்.

* * *

மறுநாள் அவசரம் அவசரமாக என் நண்பன் ராஜேந்திராவைக் காணச் சென்றேன். அவனுடைய முகத்தில் துக்கம் படர்ந்திருந்தது.

"ஏன் சந்திரா உன்னுடன் கோபித்துக் கொண்டாளா?" என்றேன்.

அவனுடைய முகத்தில், எள்ளும், கொள்ளும் வெடிக்கும் போலிருந்தது.

"நான்தான் விஷயத்தை எப்போதே அறிந்து விட்டேனே. எப்போது, உனது அம்மான் மகளுக்கும் உனக்கும் கலியாண எழுத்து என்று ஏமாற்றத்துடன் கேட்டான்.

அடடா! இதற்காகவா இப்படித் துக்கப்படுகிருய். இதை உன்னிடம் நேரே சொல்லவேண்டும் என்பதற் காகத்தான் வந்தேன். நான் உங்கள் காதலைத் தடை செய்ய விரும்பவில்லை. சந்திராவை விவாகம் செய்யும்படி என்னை வற்புறுத்துகிருர்கள். ஆனல் அவள் உன்னை மனமாரக் காதலிக்கிருள். உங்கள் களங்கமற்ற காதல், நிறைவேறட்டும்! என்று சொல்லி பக்கத்திலிருந்த கதிரையில் அமர்ந்தேன்.

ராஜேந்திராவின் முகம் மலர்ந்தது. நான் கதையை மீண்டும் ஆரம்பித்தேன்.

இவ்வுலகில் கமலாவதியைத் தவிர எவரையும் நான் கண்ணெடுத்துப் பார்க்கப் போவதில்லை. என்று சொல்லி முடிவதற்குள் ராஜேந்திரா இடைமறித்து,

"யார் நாம் அன்று வீதியில் கண்டவள்தானே?"

ஆம்! ஆம்!! அவளேதான்

"நேற்று மாலையில் அவள் றிக்ஷோவில் போகும்போது"

என்ன நடந்தது, என்று துடிதுடித்துக்கேட்டேன்.

"பஸ் மோதி வைத்திய சாலையில் இருக்கிருள்'' என்ருன்.

அவ்வளவுதான், ஐயோ! என்று கத்திக்கொண்டு வைத்தியசாலைக்கு ஓடினேன்.

அவள் தன் கடைசி நிமிடத்தில் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். நீண்ட கரு விழிகள் என்னை ஆவலுடன் பார்த்தன. வாடி வதங்கிய அவளுடைய கரங்கள் மேலெழுந்தன. அதை என் கைகளால் பிடித்தேன். கண்கள் மூடின. அப்புறம் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. மறுநாள் கண்விழித்தபோது நான் என்வீட்டிலிருந்தேன். பக்கத்தில் என் தாய் நின்ருள்.

கடவுள்மீது பழியைப் போட்டுவிட்டு உருத்திராக்கம் அணிந்து ஊரைவிட்டுக் கிளம்பிவிட்டேன். கமலாவின் காதல் இப்போது கடவுளின் காதலாக மாறிவிட்டது!

## அறிவித்தல்

யாழ்ப்பாணம், வீட்டுமிருக உணவுப் பண்டகசாலையில் மன்னர் அரிசித்தவிடு அந்தர் ஒன்று ரூபா 8-50 வீதம் வீட்டுமிருகச் சொந்தக்காரர்களுக்கு மாத்திரம் விற்பனைக்கிருக்கிறது. தவிட்டுக்குரிய விண்ணப்பங்கள் கீழ்க் கையொப்ப மிடுபவர்க்கு அனுப்பப்படவேண்டும்.

M. சிறிகாந்தா

அவசரகால உதவிமாகாண அதிபர்

யாழ்ப்பாணம்

2-9-46

[2895]

## FOR SALE

**2 - 8" *Grinding Mills* for flour and brand.**

**1 - 6'x3' *Sifter* suitable for brand and flour**

**Prices and Particulars on application.**

**Samuel, Sons & Co. Ltd.,**
Hospital Street,
Jaffna.

[2887]

## இரண்டு பாணர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எப்போது கதவு திறக்கும் என்று எதிர் பார்த்திருந்த சோழன் காதிற் கதவு திறந்த ஒலி விழவில்லை, அதற்குப் பதிலாக மனைவியின் குரல்—இனியகுரல்தான்!—கேட்டது. "ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்" என்று அவள் ஒலி கணீரென்று கேட்டது. அதைத் தொடர்ந்து தாழ்ப்பாள் ஒன்று போடப்படும் சத்தமுங்கேட்டது!

பாவம், சோழனுக்குப் பெரிய ஏமாற்றம் இருந்தும் திடீரென்று ஒரு யோசனையும் உதித்தது. 'ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாழ்ப்பாள்' என்று அவள் கூறியதும், புகழேந்தியின் நினைவு ஏற்பட்டது. அவளோடு அனுப்பப்பட்ட புகழேந்தியைத் தான் மறந்தது எவ்வளவு மடைத்தனம் என்று இரங்கினுன். பக்கத்திலே என்றுமில்லாத ஏமாற்றத்தோடு நின்ற ஒட்டக்கூத்தரைப் பார்த்து 'புகழேந்திப் புலவர் எங்கே?' என்று விசாரித்தான். ஒட்டக்கூத்தரும் நடந்ததை—அதாவது தான் புகழேந்திப் புலவரைச் சிறையில் அடைத்ததை—கூறினுர். இந்தக் கதையைக் கேட்டதும், அரசனுக்கும் மனைவி கொண்ட ஊடலுக்குக் காரணம் வெளிப்பட்டது. புகழேந்திப் புலவரைச் சிறையினின்று உடனே விடுவித்து அழைத்து வரச் சொன்னுன்.

புகழேந்திப் புலவர் வந்ததும், அவர்மூலமாகவே மனைவி கொண்ட ஊடலையும் போக்கக் கருதி, நடந்த விஷயங்களை அவருக்குக் கூறினுன். புகழேந்திப் புலவர் விஷயம் தெரிந்தவர் பெண்களின் இயல்பையும் நன்ருக அறிந்தவர். ஒட்டக்கூத்தர் செய்ததுபோல, அவர் சோழனது குடியை உயர்த்திப் பேசவில்லை. அவள் பிறந்த பாண்டிய வமிசத்தை உயர்த்திப் பேசினுல் மாத்திரமே காரியம் பலிக்கும் என்பதை உணர்ந்தார். பின்வரும் பாடலைப் பாடினுர்:

"இழையொன் றிரண்டு வகிர்செய்த
நுண்ணிடை யேந்திழையே
குழையொன் றிரண்டு விழியணங்
கேகொண்ட கோபந்தணி
மழையொன் றிரண்டுகை மானு
பரணனின் வாயில்வந்தாற்
பிழையொன் றிரண்டு பொருரோ
குடியிற் பிறந்தவரே."

உள்ளேயிருந்த ராஜகுமாரி இந்தப் பாடலைக் கேட்டாள். புகழேந்தியின் குரலைக் கேட்டாள். தன்னை, 'பெரிய குடியிற் பிறந்தவள்' என்றும் அப்படிப் பெருங்குடிப் பிறந்தவர், சோழன்வாயில் தேடி வலியவந்தபோது 'இரண்டொரு பிழை பொருரோ' என்று கூறியதையும் சிந்தித்தாள். தான் பெருங்குடிப் பிறப்பினள்தான் என்பதை நிரூபிப்பதற்காகக் கதவைத் திறக்க வேண்டியதுதான் என்று தீர்மானித்தாள். அன்றியும் புகழேந்தியைச் சிறையி லடைத்தமையாலன்ருே அவள் ஊடல்கொள்ளவேண்டி வந்தது. எந்தப் புகழேந்தியின் புகழைக் காக்கவேண்டி அவள் கதவடைத்தாளோ, அந்தப் புகழேந்தியே நேரில் வந்து தனது கணவனுக்காகப் பரிந்து பேசும்போது இனியும் ஊடிக்கொண்டிருக்கக் காரணமில்லையே!

கதவும் திறந்தது.

பாணர் செய்யும் வேலை எவ்வளவு கஷ்டமான வேலை! சிறந்த புலவர்கள்கூடவன்ருே இந்த வேலையைச் சரிவரச் செய்யத் தெரியாமல், பிழைபட்டு, இரட்டைத்தாழ்ப்பாள் போடும்படியாகவும் செய்து விடுகிருர்கள்!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest Circulation in Ceylon, India & Malay States

Vol. 17 | Chunnakam, Sunday, Sep. 15, 1946 | No. 10

# சுதந்திர வாழ்வின் பெருமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. ஆதலின் இவற்றை நாம் எண்ணியவுடனேயே அகற்றிவிடலாமென்று நினைந்து ஏமாந்துபோகாது, தீவிர முயற்சி எடுப்பது நம் கடன். சீக்கிரத்தில் இச்சாதிவித்தியாசமெனும் பேயை ஓட்ட முயல்வதும் நம் கடன். அல்லும் பகலும் அனவரதமும் இந்த ஒரே இலக்குடன் தொண்டாற்றுவதும் நம் கடன். ஆனால் முயற்சிசெய்யும்பொழுது அனுகூலம் வரக்கூடிய முறையைத் தீர ஆராய்ந்து தொண்டாற்றுவதும் நங் கடனே. நாம் எதிர்பார்த்த அளவிற் சித்தி எய்தாதபோதிலும் மனந்தளராதுமேலும்மேலும் விடாமுயற்சியுடன் நமதுதொண்டுகளைத் தொடர்ந்துசெய்யவேண்டியது நமது கடமை. நாங்கள் ஈடுபடும் இம்முயற்சிக்குத் தீவிர மனப்போக்குத் தேவை. அத்துடன் விவேகமுந் தேவை. இவை மாத்திரமல்ல, விடாமுயற்சியும் தியாகமும் தேவை. இவைமட்டும் போதுமா? ஒற்றுமை வேண்டாமா என்று கேட்பின், இவை யாவும் நம்மிடம் இருப்பின், ஒற்றுமை தானேவரும்.

இதுவரையும் பொதுவாக எங்கள் தொண்டிற்கு வேண்டியனவற்றைக் கூறினேன். இனி அதேதுறையிற் சிறிது நுணுகி ஆராய்வோம். நான் முன் கூறியதுபோல எங்கள் சமூக அமைப்பு மிகமிகப் பழைமை வாய்ந்த ஒன்று. இதை நாம் உடைக்கப்புகின், இரண்டு காரியங்களை நாம் கவனிக்கவேண்டும். முதலாவதாக உண்டாக்கக்கருதும் சமூக அமைப்பு என்ன? இரண்டாவதாக நாம் விரும்பும் சமூக அமைப்பை ஆக்குவதற்கு எவ்வித மனப்பான்மை இந்நாட்டு மக்களிடந் தோன்ற வேண்டும். இவ்விரண்டையும் யான் தனித்தனியே குறிப்பிட்டபோதிலும் இவையிரண்டும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்புபூண்டு ஒன்றை ஒன்று தழுவிநிற்கும் பண்புடையன. இவ்வாறு புதிய சமூக அமைப்பும், அதற்கு வேண்டிய மனப்போக்கும் ஒன்றையொன்று தழுவி நின்றாலும், இரண்டையும் தனித்தனியே எடுத்து ஆராய்வதே தக்கதென்று நம்புகிறேன்.

## சம உரிமை

புதிய சமூக அமைப்பிற்கு வேண்டிய சாதனங்கள் எவையென ஆராயும்பொழுது என் மனதில், எம்மவர் யாவருக்கும் கல்வியிற் சம உரிமை ஏற்படுதலே முதலிடம் பெறுகின்றது. கல்வியின் பயன்களை விரிவாய் எடுத்துக்கூற அவசியமின்றேனும் கல்வியாலேயே உங்களுக்கு விடுதலை வரும் என்பதை யான் மீண்டும் வற்புறுத்த விரும்புகின்றேன். பழைய கண்மூடித்தனமான கொள்கைகளை அகற்றிப் புதிய தாராள மனப்போக்கையும், விரிந்த கொள்கைகளையும் ஆக்குவதற்குக் கல்வியினுஞ் சிறந்த சாதனம் பிறிதொன்றுமில்லை. ஆதலின் இப்பொழுது அரசினரால் நிறுவப்பட்டிருக்கும் இலவசக் கல்வித்திட்டத்தின் பலன்களை உங்கள் பிள்ளைகள் யாவரும் அனுபவிக்கும்படி நீங்கள் விடாமுயற்சி செய்தல்வேண்டும். அத்துடன் இதைமாற்றச் சிலர் சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். இவர்களின் முயற்சி கைகூடாவண்ணம் நீங்கள் விழிப்பாய் இருக்கவேண்டும். பாராளுமன்றத் தேர்தலுக்கு அபேட்சகராய் வருபவர்களிடம் இருந்து, இலவசக்கல்வியை மாற்றுவதற்குத் தாம் உடன்படமாட்டாரென்று நீங்கள் வாக்குறுதி பெறவேண்டும். அத்துடனில்லாது, இலவசக்கல்வி கிடைத்தபோதிலும் வறுமையாலே பள்ளிக்கூடங்களுக்குப் போக முடியாத பிள்ளைகளுக்கு உதவிபுரிய நீங்களும் ஓர் நிதி திரட்டவேண்டும். மேலும் இயந்திரங்கள் மூலமாய் நடைபெறுந் தொழில்கள் கூடிக் கூடிவரின் பிறப்பை ஒட்டிய உயர்வுதாழ்வும் அருகி அருகிப்போய் விடும். எல்லாச்சாதியாரும் இத்தகைய தொழில்களில் ஈடுபடச் சாதி வித்தியாசமுந் தேய்ந்தொழியும்.

## போலி நண்பர்கள்

இனி மனப்போக்கை மாற்றுவதற்கு வேண்டிய சாதனங்கள் எவை என்பதையும் சிறிது ஆராய்வாம். நான் மேலே கூறியவற்றின் பெறுபேறாகவே உங்களது, உங்களை ஒடுக்குவோரது மனப்போக்கு மாறும் என்று நம்புகிறேன். மற்றவர்களது மனப்பான்மை மாறுவதுபோல உங்கள் மனப்பான்மையும் கட்டாயம் மாறவேண்டும் என்பதை வற்புறுத்த விரும்புகின்றேன். மற்றவர்கள், தாம் உயர்ந்த வகுப்பினர் என்றும், உங்களைப்போன்றோர் தமக்குச் சில தொண்டுகள் செய்யும் ஏவலாளராய் இருக்கவேண்டும் என்றும் எண்ணுவதைக் கைவிடவேண்டியது அவசியமாகும். அவர்களிற் சிலர் உங்கள் உரிமைகளை உணர்ந்தவர்கள், உங்கள் விடுதலை இயக்கத்தில் அநுதாபமுள்ளவர்கள்; உங்களைப்போலத் தீவிர போக்குடையவர்கள்; மனுஷராய்ப் பிறந்த யாவர்க்கும் அரசியல் முதலாம் பொதுத் துறைகளிற் சம உரிமை இருப்பதே தர்மமென்னுங் கொள்கையையுடையவர்கள், அவர்களும், உங்கள் வாக்குரிமைகளைப் பெறுவதற்கோ, அல்லது வேறேதாவது சகாயத்தைப் பெற்றுக்கொள்வதற்கோ உங்களிடம் அநுதாபம் உள்ளவர்போல நடக்கும் வேஷதாரிகளும்உளர். உங்கள்விவேகத்தை உபயோகித்து உங்கள் உண்மை நண்பர் யார் என்றும்,போலி நண்பர் யாரென்றும் மட்டிட்டறிந்து உங்கள் உண்மை நண்பருக்கே ஆதரவளித்து, அவர்கள் உங்களுக்காகச் செய்யுந்தொண்டு வெற்றிபெறச்செய்தல் உங்கள் ஒவ்வொருவருடைய கடமையுமாகும். தேர்தல் நெருங்குகிறது; இனி உங்கள் வாக்குரிமையைப் பெறுவதற்கு அநேகர் உங்கள்பால் முன்னொருபோதுங் காட்டாத கருணையைக்காட்டுவார்கள்; உங்கள் குறை நிறைகளை விசாரிப்பார்கள். உங்களுக்கு உதவி புரிய முன்வருவார்கள். இவர்கள் பெரிய பட்டதாரிகளாய் இருக்கலாம்; அதிகார புருடராய் இருக்கலாம்; தமது சொல்வன்மையால் உங்களை மயக்கும் ஆற்றல் படைத்தவர்களாய் இருக்கலாம்; இவற்றால் நீங்கள் அவர்களை நம்பி ஏமாந்துபோகாதீர்கள்.

## ஒதுங்கவேண்டாம்

ஆனால் யார்தான் என்ன செய்தபோதிலும் உங்கள் ஈடேற்றம், உங்கள் கைகளிலேயே இருக்கின்றது. அது உங்களால் உண்டாகவேண்டிய ஒன்றென்பதை மறந்துவிடாதீர்கள். மற்றவர்கள் உங்களைத் தம்மிற் குறைந்தவர்கள் என்று நினைப்பதைக் கைவிடுவதிலும் 'நாங்கள் மற்றவர்களிலும் குறைந்தவர்கள்—தாழ்ந்தவர்கள்' என்று நீங்கள் நினைத்து ஒழுகுதலை நீங்களே கைவிடுதல் அவசியமாகும். நீங்கள் தாழ்ந்தவர்கள்; மற்றவர்களுக்குத் தொண்டு செய்தலே இறைவன் உங்களுக்கிட்ட பணி; நீங்கள் செய்யத்தகும் வேலைகள் சில; செய்யத்தகாத வேலைகள் பல; நீங்கள் எப்போதும் பணிந்து ஒதுங்கி நடக்க வேண்டியவர்கள் என்னும் எண்ணங்களை அறவே ஒழியுங்கள். உங்கள் மரியாதையை நீங்களே பேணினாற்றான் மற்றவர்களும் உங்களை மரியாதை பண்ணுவார்கள். நீங்களே உங்களை இழிவாக எண்ணி இழிவானவர்களாக ஒழுகினால், மற்றவர்களும் உங்களை இழிவாகத்தான் நடத்துவார்கள். நீங்கள் உங்கள் மரியாதையைப் பேணுவதென்றால் மற்றவர்களை அவமரியாதை செய்யவேண்டுமென்பது கருத்தல்ல. மரியாதைக்குரியவர்கள் யாராய் இருந்தாலும் அவர்களை மரியாதை செய்வது மக்கள் மரபு.

உங்கள் உரிமைகளையும் நீங்களே பேணுவீர்களாயின் மற்றவர்களும் நாளடைவில் உங்கள் உரிமைகளுக்கோ, உங்கள் சுயமரியாதைக்கோ பங்கம் விளைக்கும் எச்செயல்களையுஞ் செய்ய முற்படார்கள்.

காந்தியடிகள், உங்கள் வகுப்பினர் மற்றைய வகுப்பினரால் புறக்கணிக்கப்பட்டபடியாற் போலும் உங்களைக் கடவுளுடைய மக்கள் என்னுங் கருத்தால் 'ஹரிசனங்கள்' என்னும் பதத்தால் அழைக்கின்றார். மனிதரால் புறக்கணிக்கப்படும் பகுதியாருக்கு இறைவனே துணையென்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் தம்மைப் புறக்கணித்து, தமதுரிமைகளைப் பேணாதுவிட்டுத் தமது சுயமரியாதையைத் துறந்து, வாழ்பவருக்கு இறைவன்தானும் துணைபுரிய முடியுமோ என்பது ஐயத்திற்கு இடமானதே!

**SAMUEL SONS & Co., Ltd.,**

*HOSPITAL ROAD, JAFFNA*

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST., COLOMBO
T'Phone: 2341 (2 lines)

**நியாயமான விலை, நடுநிலை, நற்கீர்த்தி, திட நம்பிக்கை சிறப்பாக உள்ள நம் வர்த்தகசாலை:**

- கட்டிட வேலைக்குரிய இரும்புக் கம்பிகள், சலாகைகள், கேடர்கள், சீமெந்து, செங்கல், கறையான் எண்ணெய், பூட்டு, பிணைச்சல்
- கமத்தொழில், கைத்தொழில் ஆயுதங்கள்
- நீரிறைக்கும் இயந்திரங்கள், குழாய்கள், தாங்கிகள்
- பைசிக்கிள் வண்டிகள், ரியூப்ஸ், ரையர்ஸ், கிறீஸ்
- சல்லடை வலைகள், ஒட்டுப் பலகைகள் (Ply-wood), இருமிநாசினி, மைஎண்ணெய், மை வகைகள்

ஆதியன அடக்கியுள்ளது.

சகாயமான விலைக்கு எப்போதும் பெற்றுக்கொள்ளலாம்.

**சாமுவேல், சன்ஸ் & கம்பெனி லிமிரெட்**

ஆஸ்பத்திரி ரோட் : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2877]

## ஆசியநாடுகளின் மகாநாடு

ஆசிய நாடுகளின் மகாநாடு 1947-வருஷம் ஜனவரிமாதக் கடைசிவாரத்திலோ அல்லது பெப்ரவரிமாத முதல்வாரத்திலோ புதுடில்லியில் நடைபெறலாம். மகாநாட்டின் உருவகச் சபைத் தலைவரான நேருஜீ, ஆசியநாடுகளின் அரசாங்கத் தலைவர்களுக்கு அழைப்புகள் அனுப்பியிருக்கின்றார். இலங்கைக்கும் அழைப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

## புதிய நவமணி பேசும் படமாளிகை

### சாவகச்சேரியில் திறப்புவிழா

நவீன முறைப்படி சகல வசதிகளுடனும் 'சாவகச்சேரியில்' அழகாக நிறுவப்பெற்றிருக்கும் நவமணி டோக்கீஸ் என்னும் புதிய பேசும்படமாளிகையைக் கடந்த திங்கட்கிழமை (9-9-46) பிற்பகல் ஸ்ரீ ஆபிரஹாம் காடினர் திறந்து வைத்தார். தொகையான அன்பர்களும், பிரமுகர்களும் பலவிடங்களிலிருந்தும் வந்திருந்தனர். நவமணி நிர்வாகஸ்தர் அனைவரையும் வரவேற்று உபசரித்தனர். அற்புதமாக அமைக்கப்பெற்றிருக்கும் இப்படமாளிகை சினிமாரசிகர்களுக்கு ஒரு நல் விருந்தாகும். உயர்தரமான படங்களை நவமணியிலுள்ள வெள்ளித்திரையிற் கண்டு மகிழலாம்.

## குருபூசையும் இலிங்க ஸ்தாபனமும்

காலஞ் சென்ற தமிழ்ப் பெரியார்களின் ஞாபகங்கள் வருடாவருடங் கொண்டாடப் பெற்று வருவது பொருத்தமான விஷயமாகும். அவர்கள் தமிழ்ப் பாஷைக்குங் கல்விக்குஞ் செய்து வந்த தொண்டுகளை நாம் மறவாது நன்றி பாராட்டி வருவதும் முக்கியமாகும். இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் சிவபதமடைந்த குரு ஸ்ரீ மாணிக்கத்தியாகராச பண்டிதரவர்களின் ஆண்டு நிறைவு விழா சென்ற சனிக்கிழமை (7-9-46) அளவெட்டியிலுள்ள காத்தவராயர் கோயிலில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. அத்தினம் மேற்படி கோயிலுக்குப் பின்புறத்தில், பண்டிதரின் சமாதிமீது புதிதாக அமைக்கப்பெற்ற கட்டடத்தில், பண்டிதரவர்கள் பூசித்துவந்த சிவலிங்கம், சைவக்கிரியைகளுடனும் ஆசீர்வாதங்களுடனும் மங்கல கோஷங்களுடனும் நிறுவப்பெற்றது. பின்னர் அபிடேகம், நைவேத்தியம், ஆராதனை முதலியன மிகச் சிறப்பாக யாவரும் ஆநந்தமடையும்படி மனப்பூர்வமாகச் செய்து நிறைவேற்றப்பட்டன, நூற்றுக்கணக்கான அன்பர்கள் சமுகமளித்து இவ் வைபவத்தைக் கண்டுகளிப்பராயினர். அதன்பின் அன்னதானம் முதலியன அளிக்கப்பெற்றுக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது. இவ்விழா இனிது நிறைவு எய்தற்குக் காரணராயிருந்தவர்கள் பண்டிதரவர் சிரேட்டபுத்திரர் திருவாளர் மா. குகராஜா அவர்களும் அவர் சகோதரர் திரு. மா. குமாரசுவாமியவர்களுமே. மேலும், பண்டிதரின் மற்றைய உறவினரும் நண்பர்களும்சமுகமளித்துத் தமது அபிமானத்தைத் தெரிவித்துச் சபையைச் சிறப்பித்துச் சென்றனர்.

**FOR SALE**

**The Ideal Roofing for the Peninsula**

**"RAJH"**

**Patent Half Round Tiles** (Indian Make)

A limited supply is available for immediate delivery
EX Stores Kankesanturai.

*Samples and Prices from :—*

**Samuel, Sons& Co. Ltd.,**
Jaffna & Colombo.

[2888]

## 42-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

பட்டு இறக்குமதி செய்பவர்களாய் மொத்த வியாபார லைசென்ஸ் உள்ளவர்கள் இதனைலறியவேண்டியது.

(1) விலை அடையாளமிட்டு முடியும் தரவாயில் தகவல்நிலைய உதவிக் கட்டுப்பாட்டதிகாரிக்கு சில்லறை விலை யார் 5 ரூபாவுக்கு மேற்படாத பட்டு வார்நாமாவில் எவ்வளவு தொகை மொத்த வியாபாரத்துக்கு விற்கப் புறம்பாக வைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கவேண்டும்.

(2) அவ்வாறு அறிவிக்கப்பட்ட முழுத் தொகையையும் மொத்த வியாபாரத்துக்கே விற்கவேண்டும்.

(3) தற்போது பருத்திப் புடவைகளின் மொத்த வியாபாரத்துக்குரிய விதமாக தகவல் நிலைய உதவிக்கட்டுப்பாட்டுஅதிகாரியின் கட்டுப்பாட்டுக்குக் கீழ்ப் படிந்ததாக, அவ்வகையான பட்டுக்களை மொத்த வியாபாரத்துக்கே விற்கவேண்டும்.

ஈ. ஜெரூட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு, 9-9-46 [2898]

**யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி**

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[2870]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலயம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946செப்டம்பர் 15உ ஞாயிற்றுக்கிழமைஅச்சிட்டுவெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org